# இலக்கு

GLOBAL TAMIL MEDIA CENTER

வாராந்த மின்னிதழ்

ilakku.org

SUBSCRIBE US! youtube.com/c/IlakkuWeb

LIKE US! facebook.com/ilakku.ilakku.10

FOLLOW US! twitter.com/Ilakku1

இதழ் 279 | சனி, மார்ச் 23, 2024 | 14 பக்கங்கள்


# இலங்கையின் 76 வருட தொடர் ஏமாற்று அரசியலின் புதிய முகம் அநுர



திரு. செல்வநாயகம் நேசன் தலைமை ஒருங்கிணைப்பாளர் தமிழ் தேசிய மக்கள் இயக்கம்

# பஸிலுக்கு அதிர்ச்சியளிக்கும் ரணிலின் காய் நகர்த்தல்கள்

அகிலன்

# வடக்கு கடலில் நடப்பதென்ன?



செயலாளர் முகமத் ஆலம் நேர்காணல்




© 2024 இலக்கு இணையம்

# இந்தியாவிலுள்ள இலங்கை தமிழர்களுக்கு குடியுரிமை



“இலங்கைத் தமிழர்களுக்கு இந்திய குடியுரிமை வழங்கப்படும்” என்று தமிழ்நாட்டின் ஆளும் கட்சியான தி.மு.க. தனது தேர்தல் அறிக்கையில் வாக்குறுதி அளித்துள்ளது.


தி.மு.கவின் தேர்தல் அறிக்கையை அக்கட்சியின் தலைவரும் தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் சென்னை அறிவாலயத்தில் வெளியிட்டார். இதன்போது, அவர் ஆற்றிய உரையில் தெரிவித்திருப்பதாவது –

“சொன்னதைச் செய்வோம் செய்வதைச் சொல்வோம் என்பது எங்களது வழிகாட்டும் நெறி முறை. அதன் அடிப்படையில் தான் இந்த

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

# இலங்கை வந்த ஜேர்மனியின் ஆய்வுக் கப்பல் – சீற்றத்தில் சீனா

ஜேர்மனியின் ஆராய்ச்சி கப்பலுக்கு இலங்கை அனுமதி வழங்கியமை குறித்து சீன தூதரகம் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ள நிலையிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.




ஆராய்ச்சிகளில் ஈடுபடும் கப்பல்களுக்கே இலங்கை தடை விதித்துள்ளது – ஆராய்ச்சி கப்பல்கள் மீள்நிரப்புதலில் ஈடுபடுவதற்கு இலங்கை தடை விதிக்கவில்லை என வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் நிலுக்க கதிருகமுவ தெரிவித்தார்.

ஜேர்மனியின் ஆராய்ச்சிக் கப்பல் எரிபொருள் மீள் நிரப்புவதற்கே

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

# புத்தாக்கம் சம்பந்தமான மாகாண விழிப்பூட்டும் நிகழ்ச்சியும், மாகாண புத்தாக்க போட்டியும்



இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு 2024 ஆண்டிற்கான ‘சஹசக் நிமவும் பச்சாக்க தேசிய போட்டிற்கான விழிப்பூட்டும் நிகழ்ச்சி மற்றும் மாகாண மட்டத்தில் புத்தாக்க கண்காட்சி போட்டியை நடாத்துவதற்கு சகல நடவடிக்கைகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே இம் மாகாணத்தில் நடைபெறவுள்ள புத்தாக்க விழிப்

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

# கணனிகளை அதிகம் பயன்படுத்துவது ஆண்களில் மலட்டுத்தன்மையை உருவாக்கும்

அதிக நேரம் கணணிகளை பயன்படுத்தும் ஆண்கள் விந்தணுக்களின் குறைபாடு மற்றும் மலட்டுத்தன்மை போன்றவற்றால் அதிகம் பாதிக்கப்படுவதாக சீன விஞ்ஞானிகள் மேற்கொண்ட ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.



40 வயது தொடக்கம் 69 வயது வரையிலான 220000 ஆண்களில் இந்த ஆய்வினை விஞ்ஞானிகள் மேற்கொண்டுள்ளனர். கணனியை ஒவ்வொரு 1.2 மணிநேரம் பயன்படுத்தும்போதும் ஆண்களில் விந்தணுக்களின் குறைபாடு 3.6 மடங்காக அதிகரிக்கின்றது.

இது தொடர்பான ஆய்வுக் கட்டுரை ‘Andrology’ என்ற சஞ்சிகையில் கடந்த புதன்கிழமை(20) வெளியிடப்பட்டுள்ளது. தொலைக்காட்சி பார்ப்பது மற்றும் வாகனங்களை செலுத்துவது போன்றவை ஆண்களில் மலட்டுத்தன்மையை ஏற்படுத்துவதற்கான சான்றுகள் இல்லை. மேலும் இந்த ஆய்வில் 40 வயதுக்கு குறைவானவர்கள் தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வில்லை.

இளையவர்களே அதிக நேரம் கணணிகளில் விளையாட்டுக்களை விளையாடி வருவதால் அவர்கள் அதிகம் பாதிக்கப்படலாம்

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

# பாகிஸ்தானில் உள்ள சீன துறைமுகம் மீது தாக்குதல்

பாகிஸ்தானில் கௌடார் பகுதியில் அமைந்துள்ள சீனாவின் துறைமுகம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை தாம் முறியடித்துவிட்டதாக பாகிஸ்தான் அரசு கடந்த புதன்கிழமை(20) தெரிவித்துள்ளது.



பாகிஸ்தான் மற்றும் சீனாவுக்கு இடையிலான பல பில்லியன் டொலர்கள் பெறுமதியான பொருளாதார பாதையின் முக்கிய துறைமுகம் இந்த துறைமுகமாகும்.

இரண்டு மணிநேரம் இடம்பெற்ற தாக்குதலில் தாக்குதலில் ஈடுபட்ட ஆயுததாரிகள் எட்டுப்பேர் கொல்லப்பட்டதுடன், பாதுகாப்பு படையினர் தரப்பில் இருவர் காயமடைந்துள்ளதாக அரச அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். பலொசிஸ்ரான் விடுதலை இராணுவம் இந்த தாக்குதலை மேற்கொண்டதாக உரிமைகோரியுள்ளனர்.

பாகிஸ்தானில் பிரிவினை கோரி அவர்கள் போராடி வருகின்றனர். துறைமுக பகுதியில் இருந்த பாகிஸ்தானின் புலனாய்வுத் துறையினரை குறிவைத்து தாக்குதல் நடத்தியதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.


சீனாவின் துறைமுகம்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# உக்ரைனுக்கு 60,000 படையினரை அனுப்ப நேட்டோ திட்டம்

முதல்கட்டமாக உக்ரைனின் ஒடிசாபகுதிக்கு2,000படையினரை அனுப்புவதற்கு பிரான்ஸ் திட்டமிட்டுள்ளதாக ரஸ்யா வின் வெளியகபுலனாய்வுப் பிரிவின் தலைவர் நரிஸ்கின் தெரிவித்துள்ளார்.


அதற்கான தயாரிப்பு பணிகள் நிறைவடைந்துவிட்டன. இது தொடர்பில் பிரான்ஸின் அதிபர் இமானுவேல் மக்ரோன் விரைவில்



அறிவித்தலை வெளியிடுவார் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

# ரஸ்ய அதிபராக மீண்டும் பூட்டின் தெரிவு – போர் உக்கிரமடையலாம்



ரஸ்யாவில் கடந்த வாரம் இடம்பெற்ற அதிபருக்கான தேர்தலில் ரஸ்யாவின் தற்போதைய அதிபர் விளமிடீர் பூட்டீன் மீண்டும் அதிகப்படியான வாக்குகளால் வெற்றிபெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஐந்தாவது தடவையாக 75 மில்லியன் வாக்குகளை பெற்று பூட்டின் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இது 87.28 விகித வாக்குகளாகும்.

இந்த தேர்தலில் பூட்டினை எதிர்த்து போட்டியிட்ட பொதுவுடமைக் கட்சியின் தலைவர் நிக்கலே கரிரனோவ் 4.31 விகித வாக்குகளையும், புதிய மக்கள் கட்சியின் தலைவர் விலடிஸ்லேவ் டவன்கோவ் 3.85

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# இஸ்ரேலுக்கான ஆயுத ஏற்றுமதியை நிறுத்தியது கனடா

இஸ்ரேலுக்கான ஆயுத ஏற்றுமதியை கடந்த ஜனவரி மாதம் முதல்தாம் நிறுத்தியுள்ளதாக கனடாவின் வெளிவிவகார அமைச்சர் மெலனி ஜோலி கடந்த புதன்கிழமை(20) தெரிவித்துள்ளார்.



கடந்த ஜனவரி மாதம் முதல் ஆயுத ஏற்றுமதியை கனடா நிறுத்தியுள்ளது. எமது நிபந்தனைகளை இஸ்ரேல் பூர்த்திசெய்யும் வரையிலும் அது தொடரும். ஜனவரி மாதத்திற்கு முன்னர் அனுமதிக்கப்பட்ட பொருட்கள் இஸ்ரேலுக்கு அனுப்பப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலுக்கு ஆயுதங்களை விற்பனை செய்யும் நாடுகளில்

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

## முள்ளிவாய்க்காலில் என்ன தான் நடந்தது? “போரின் சாட்சியம்” நூல் வெளியிடு




ஈழநாதம் நாளிதழில் செய்தியாளராகப் பணியாற்றிய சுரேன் கார்த்திகேசு எழுதிய “போரின் சாட்சியம்” என்ற நூல் எதிர்வரும் மே மாதம் சுவிற்சலாந்தில் வெளியிடப்படவுள்ளது.

உண்மையில் முள்ளிவாய்க்காலில் என்ன தான் நடந்தது? பதினைந்து ஆண்டுகள் ஆகிவிட்டது. இப்போதும் யாராவது ஒருவரைப்போட்டு குடையும் கேள்வியிது.

ஆர்மேனிய, ருவாண்டா, அல்பானிய – கொசோவா, ரோகிங்கிய இனப்படுகொலைகள் போன்று தமிழினப் படுகொலையும் மிக நேர்த்தியாகத் திட்டமிட்டு நடத்தப்பட்டது.

இது பரந்த தளத்தில் ஆய்வுக்குட்படுத்தப்பட வேண்டியது. இனப்படுகொலையை நடத்தியவர்களுக்குத் தண்டனையும் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நீதியும் கிடைக்க வேண்டுமென இன்று வரை பல

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

## இந்தியத் துணைத் தூதரகத்தை முற்றுகையிட முயன்றதால் பதற்றம்



இந்திய மீனவர்களின் அத்துமீறிய செயற்பாட்டைக் கண்டித்து யாழ்ப்பாணம் மாவட்ட மீனவர்கள் கடந்த புதன்கிழமை(20) யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தின் முன்பாகக் கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்தியமீனவர்களின்அத்துமீறியசெயற்பாட்டை கண்டித்து யாழ். மாவட்ட மீனவர்கள் நான்கு பேர் முன்னெடுத்துள்ளஉணவு தவிர்ப்புப் போராட்டம் இன்று இரண்டாவது நாளாகவும் தொடர்கின்றது.

யாழ். மாவட்ட கிராமிய கடற்றொழில் அமைப்புக்களின் சம்மேளனமும், யாழ். மாவட்ட கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனமும் இணைந்து

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## நிலத்தை ஆக்கிரமித்து மக்களை வெளியேற்றி ஈழத்தமிழர் இறைமையை அழித்தல் வேகம் பெறுகிறது

சிறிலங்காப் பாராளுமன்றத்தில் சிறிலங்காவின் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் உடைய உரை நிலத்தை ஆக்கிரமித்து மக்களை வெளியேற்றி ஈழத்தமிழர் இறைமையை அழித்தல் வேகம் பெறுகிறது என்பதைத் தெளிவாக்கியுள்ளது. அவர் ‘வெடுக்குநாறி மலையில் எந்தக் கோயில்களும் இல்லை, இந்த மலையை தொல்பொருள் திணைக்களம் அநுராதபுர யுகத்துக்குச் சொந்தமான தொல்பொருள் மரபுரிமைகள் உள்ள பகுதியாக அடையாளப்படுத்தியுள்ளது. பௌத்த மரபுரிமைகள் உள்ள பகுதிகளில் பிறிதொரு தரப்பினர் தமது மதவழிபாடுகளை முன்னெடுக்கும் பொழுது முரண்பாடுகளே தோன்றும். 2023ம் ஆண்டு சட்டவிரோதமான முறையில் சிவலிங்கத்தை நிறுவினர். மார்ச் 4இல் மதிமுகராசா என்ற பூசகர் வெடுக்குநாறி மலையில் பூசை வழிபாட்டில் ஈடுபட வவனியா நீதிமன்றத்தில் கோரிக்கை மனுவை அளித்து அது நிராகரிக்கப்பட்டது. இவர் மார்ச் 8 சிவராத்திரி தினத்தன்று 400 பேருடன் சட்டவிரோதமாக வழிபாடு நடாத்தியுள்ளார். தொல்பொருள் மற்றும் வன ஜீவராசிகள் பாதுகாப்புக்கு குந்தகம் விளைவிக்கக் கூடிய முறையில் அடுப்பு மூட்டித் தீ வளர்த்துள்ளார்.

6மணிக்கு மேல் மலையில் தங்கக் கூடாதென்ற சட்டத்தையும் மீறி 40பேருடன் அங்கு தங்கியுள்ளார். இந்தச் சட்டவிரோதச் செயற்பாடுகளைத் தொல்பொருள் திணைக்கள மற்றும் வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகள் தடுத்து நிறுத்துமாறு பொலிசாரைக் கேட்டுக்கொண்டதற்கு அமையவே சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட பொலிசார் 8 பேரைக் கைதுசெய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினர் என விளக்கமளித்துள்ளார். சிறிலங்காவின் தேசிய பாதுகாப்புத் தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகராவும் சிறிலங்காப் பாராளுமன்றத்தில் "வெடுக்குநாறி மலையில் இருந்த பழமையான பௌத்த தூபி இடித்தழிக்கப்பட்டே அதன்மீது சிவலிங்கம் அமைக்கப்பட்டது. பௌத்த மரபுரிமைகளை அழித்து அதன்மீது பிறமத அடையாளங்களைக் காட்சிப்படுத்துவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். சிங்கள பௌத்தர்களின் பொறுமையைக் கோழைத்தனம் எனக் கருதவேண்டாம்" என எச்சரிப்பு வேறு விடுத்துள்ளார். இவை பாராளுமன்றத்துக்கு முன்னால் வடக்கு கிழக்குப் பாராளுமன்றப் பிரதிநிதிகள் வெடுக்குநாறி மலை விடயத்தில் ஈழத்தமிழர்களின் வழிபாட்டுச் சுதந்திரம், ஒன்று கூடும் சுதந்திரம், சட்டத்தின் முன் குடிகள் அனைவரும் சமம் போன்ற அடிப்படை மனிதஉரிமைகள் மறுப்புக்கு எதிராகச் சனநாயக முறையில் அமைதிவழியில் பதாகைப் போராட்டம் நடத்தியதற்குச் சிறிலங்கா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்காவின் அரசாங்கத்தின் பதிலாக இந்த இருவரது பேச்சும் அமைந்து சிறிலங்காவில் எத்தகைய சனநாயகம் உள்ளது, எத்தகைய சட்டத்தின் ஆட்சி உள்ளது என்பதை மீண்டும் உலகுக்குத் தெளிவுபடுத்தியுள்ளது. அத்துடன் இவ்வுரைகள் உள்ளக பொறிமுறையில் ஈழத்தமிழர்களின் தேசியப் பிரச்சினைக்குச் சிறிலங்கா அரசாங்கம் தீர்வு அளித்தல் என்பதற்கான அரசியல் கலாச்சாரம் சிறிலங்காவில் என்றுமே இல்லை என்பதையும் மீள்நிரூபணம் செய்துள்ளன. இந்நிலையில் புலம்பெயர் தமிழர்கள் நாளாந்த வாழ்வில் ஈழத்தமிழர்களின் பிரச்சினைகளை உலகுக்கு அறிவிக்க வல்ல பொதுக் கருத்துக்கோளத்தை உருவாக்கும் தங்களுக்கான ஈழத்தமிழர் தேசிய ஊடகத்தை உடன் நிறுவுவதும் அந்த ஊடகத்தின் மூலம் ஈழத்தமிழர் தாயகம் எங்கும் ஊடகவியலாளர்களை உருவாக்கி ஊடகத்தின் வழி ஈழத்தமிழர்களின் தேசிய ஒருமைப்பாட்டை வலுப்படுத்த வேண்டும் என்பதும் இலக்கின் எண்ணமாக உள்ளது.

அதுமட்டுமல்ல சரத்வீரசேகரா வடக்கு கிழக்குப் பிரதிநிதிகள் கொழும்பில் சனநாயக முறையில் போராட்டம் நடத்தி விட்டு வடக்குக் கிழக்குக்குத் திரும்பிச் செல்வதே சிங்கள பௌத்தர்களின் கருணைச்செயல் எனப்பேசி மறைமுகமாக மனித உரிமைகள் வன்முறையைத் தூண்டும் எச்சரிப்பையும் தனது பாராளுமன்ற உரையில் விடுத்துள்ளார். சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்கள் ஈழத்தமிழின அழிப்பை நடாத்திய அதே இராணுவ மனநிலையில் மீண்டும் ஒரு ஈழத்தமிழ் இனஅழிப்பை மதவெறி இனவெறி வழி தூண்டுகின்ற போக்கில் நிகழ்த்தும் இத்தகைய உரைகளை ஐக்கிய நாடுகள் மனிதஉரிமைப் பேரவையும் ஆணையகமும் அனைத்துலகச் சட்டங்களையும் ஒழுங்குகளையும் மீறும் செயல் என்ற வகையில் கவனத்தில் எடுத்து இவ்வாறு அனைத்துலக சட்டங்களை மீறுபவர்களுக்கு எதிராக அனைத்துலகத் தடைகளை விதித்து ஈழத்தமிழர்களை இன்னுமொரு இனஅழிப்பில் இருந்து பாதுகாக்க வேண்டுமென்பது இலக்கின் மற்றொரு கவனப்படுத்தலாக உள்ளது. இலக்கின் இந்தக் கவனப்படுத்தலை நடைமுறைக்குக் கொண்டு வரக் கூடிய நெறிப்படுத்தல் உரையைப் பிரித்தானிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மார்ச் 20 அன்று பிரித்தானியப் பாராளுமன்றத்தில் சிறிலங்காவின் மனித உரிமைகள் நிலை குறித்து நடாத்திய விவாதத்தில் காசல்டன் வோலிங்டன் கொன்ச்வேடிவ் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் மாண்பமை எலியட் கொல்பேர்ன் அவர்கள் நிகழ்த்தி பிரித்தானிய அரசுக்கு மட்டுமல்ல உலகுக்கு மட்டுமல்ல ஈழத்தமிழர்களுக்கும் வழிகாட்டியுள்ளார். அவரது உரையின் முக்கிய சில கருத்துக்களை மட்டும் இங்கு மீள்பதிவு செய்கின்றேன்.

"சிறிலங்காவின் 2009 முரண்பாடு இரத்த ஆற்றில் முடிவுற்றது. இறுதி மாதங்களில் சிறிலங்காவின் இராணுவம் பத்தாயிரக் கணக்கில் தமிழ்ப் பொதுமக்களை நன்கு திட்டமிட்ட முறையில் இராணுவ இலக்குகளாக்கிக் கொன்றுள்ளனர் என்ற குற்றச்சாட்டுக்கள் உள்ளன. அந்த இருண்ட அத்தியாயம் இன்னமும் திறந்தபடிதான் உள்ளது. 70000 முதல் 170000 தமிழர்களுக்கு என்ன நடந்தது என்ற பொறுப்புக்கூறல் இல்லாதநிலையில் இவர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்றே ஊகிக்கப்படுகிறது. சிறிலங்கா அரசாங்கம் யுத்தக் குற்றங்களையும் மனிதாயத்துக்கு எதிரான குற்றங்களையும் தொடர்ந்து மறுத்து வருவதால் அவர்கள் இனஅழிப்புக்குத்தான் உள்ளாக்கப்பட்டுள்ளனர் என்ற கோபம் தூண்டப்பட்டு குணப்படுத்தலை அளிக்கக் கூடிய சமாதானப்பாதைக்கு இது தடையாக உள்ளது. தமிழர்களின் நிலையும் அத்துடன் முஸ்லீம் சிறுபான்மை மக்களின் நிலையும் தொடர்ந்தும் ஆபத்திலேயே உள்ளது. சிறிலங்காவில் தண்டனையின்மை ஆட்சி செய்கிறது. மனித உரிமைகள் வன்முறைகள் நிலைத்ததாக உள்ளன. பலமான இராணுவமயமாக்கல் வார்ப்பு நீண்டகால நிழலாக உள்ளது. சிறிலங்கா இவற்றுக்குப் பொறுப்புக் கூறுவதில் தவறுவதும் நிலைமாற்று நீதிக்கான பொறிமுறைகளைத் தொடர்வதற்குத் தொல்லைகளை ஏற்படுத்துவதும் நிரந்தரமான அமைதிக்கும் மறுவாழ்வுக்குமான எல்லா நம்பிக்கைகளையும் இழக்க வைத்துள்ளது. அனைத்துலக சமூகத்தின் பொறுப்புக் கூறலுக்கான அழைப்பு உறுதியான செயற்பாடாக மாற்றப்படவில்லை. ஐக்கிய நாடுகள் மனித உரிமைக் கவுன்சில் சிறிலங்கா உய்வதற்கு முக்கியமான இழப்பாக உள்ளது அதன் பொறுப்புக் கூறலின்மையே என்பதை சரியாகக் கண்டறிந்து அடையாளப்படுத்தி உள்ளது. பல தசாப்பதங்களாகத் தேசிய உணர்வால் செலுத்தப்படும் ஆற்றலற்ற ஆட்சியே முரண்பாட்டின் மூலகாரணமாகி நாட்டின என்பதைக் கொள்ளையிட்டு இன்றைய அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகளைத் தோற்றுவித்துள்ளது.

அனைத்துலக சமூகம் தொடர்ச்சியாகச் சிறிலங்காவின் கடந்தகால, நிகழ்கால மனித உரிமை வன்முறைகளுக்குப் பொறுப்புக் கூற வைப்பதற்குரிய ஆற்றலுள்ள பொறிமுறைகளைக் கையாண்டு அனைத்துலக விசாரணையை நடாத்தி வழக்கினைப் பதிவதால் மட்டுமே சிறிலங்காவை அர்த்தமுள்ள நீதியையும் மறுவாழ்வையும் அளிக்கச் செய்து இந்த இருண்ட அத்தியாயத்தை மூட வைக்கலாம்." என்பது மாண்பமை எலியட் கொல்பேர்ன் அவர்களின் உண்மையும் நேர்மையுமான வழிகாட்டலாக உள்ளது. இவர் தனது உரையில் சிறிலங்காவின் இராணுவ வார்ப்பால் மூடப்பட்ட பகுதியாக வடக்கு கிழக்கு மக்களின் பிரதேசம் உள்ளது என்ற உண்மையை வெளிப்படுத்தி சிறிலங்காவின் 20 இராணுவ அணிகளில் 18 வடக்கு கிழக்கிலும் குறிப்பாகப் 14 வடக்கிலும் நிலைஎடுக்க வைக்கப்பட்டுள்ளது என்ற புள்ளிவிபரத்தையும் பதிவு செய்தார். ஈழத்தமிழர்களின் சமகால நிலையின் காட்சியாக இவரின் உரை அமைந்தது. இடம் கருதி அதனை முழுமையாகப் பதிவு செய்ய இயலாத நிலையில் இவரது உரையையும் மற்றையப் பிரித்தானியப் பாராளுமன்ற உறுப்பினர்களின் உரையும் வெளிவந்துள்ள பிரித்தானியப் பாராளுமன்றக் கன்சாட்டை உலகத் தமிழர்கள் உடனடியாக ஒரு நூலாக உலக மக்கள் அனைவருக்கும் அவரவர் மொழியில் வழங்குவதற்கு ஆவன செய்தாலே ஈழத்தமிழரின் உண்மைக் குரலாக அது மாறும் என்பது இலக்கின் இவ்வார எண்ணமாக உள்ளது.

ஆசிரியர்

# பஸிலுக்கு அதிர்ச்சியளிக்கும் ரணிலின் காய் நகர்த்தல்கள்

**அகிலன்**

பஸில் ராஜபக்ஷவின் அதிரடியான வருகை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு பெரும் தலையிடியைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றது. ஜனாதிபதித் தேர்தலை நோக்கி உபாயங்களை வகுத்து மெதுமெதுவாக அவர் காய் நகர்த்திக்கொண்டிருந்த நிலையில்தான் பஸில் அமெரிக்காவிலிருந்து வந்து இறங்கினார். பொதுத் தேர்தல்தான் முதலில் நடத்தப்பட வேண்டும் என்ற பசிலின் விடாப்பிடியான அழுத்தம் ரணிலின் திட்டத்தை மாறறிவிடுமா என்பதுதான் கொழும்பு அரசியலில் இன்று எழுப்பப்படும் பிரதான கேள்வி!

அரசியலமைப்பின்படி எதிர்வரும் செப்ரெம்பர் 16 க்கும் ஒக்ரோபர் 16 க்கும் இடையில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும். ஒக்ரோபர் 8 ஆம் திகதி இதற்காகப் பரிந்துரைக்கப்பட்டிருப்பதாக தகவல்கள் வெளிவந்திருக்கின்றது. பொதுத் தேர்தல் 2025 ஓகஸ்ட் மாதத்தில்தான் நடத்தப்பட வேண்டும். அதற்கு ஒரு வருடத்துக்கு மேல் உள்ளது.

பொது ஜன பெரமுனவின் ஸ்தாபகர் பசில் ராஜபக்ஷ தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த நேர்காணலில் தெரிவித்திருந்த கருத்துக்கள்தான் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னராக பொதுத் தேர்தல் வருமா என்ற கேள்விக்கு வலுச் சேர்த்துள்ளது.

அமெரிக்காவுக்கு “விடுமுறைக்காக” சென்றிருந்த பசில், மார்ச் 5 ஆம் திகதி நாடு திரும்பிய பின்னர் பரபரப்பாக காய்களை நகர்த்திவருகின்றார். மொட்டு அணியின் தந்திரோபாயங்களை வகுப்பவராக அவர் கருதப்படுகின்றார். அதனால், கடந்த இரண்டு - மூன்று வாரங்களாக அரசியல் நகர்வுகள் அனைத்தும் பசிலை மையப்படுத்தியதாகவே இருக்கின்றது.



நாடு திரும்பிய உடனடியாகவே தன்னுடைய சகோதரரர் மகிந்த ராஜபக்ஷவையும் அழைத்துக்கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்திக்க அவர் சென்றிருந்தார். இந்தச் சந்திப்பில் என்ன பேசப்பட்டது என்ற விபரங்கள் இரு தரப்பாலும் உத்தியோகபுர்வமாக வெளியிடப்படவில்லை. ஆனால், வரப்போகும் தேர்தல்கள் தொடர்பாகவே பேசப்பட்டிருக்க வேண்டும் என்பது புரிந்துகொள்ளக்கூடியதுதான். அதேவேளையில், “பேச்சுக்களில் இணக்கம் காணப்படவில்லை” என்ற தகவலும் கசிந்தது.

அதன் அடிப்படையில்தான் மற்றொரு சந்திப்பு வியாழக்கிழமை இரவு நடைபெற்றது. பசில் ராஜபக்ஷவை ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றார். தனியார் தொலைக்காட்சிக்கு வழங்கிய நேர்காணலிலும் அதனைத்தான் அவர் சொன்னார்.

அதற்கு அவர் சொன்ன காரணம் என்னவாக இருந்தாலும், இரண்டு விடயங்களை இதன் மூலமாக புரிந்துகொள்ள முடிந்தது.

முதலாவது, ஜனாதிபதித் தேர்தல் ஒன்றைச் சந்திக்க மொட்டு இன்றைய நிலையில் தயாராகவில்லை. “அரகலய” போராட்டமும், பொருளாதாரக் குற்றவாளிகள் என ராஜபக்ஷக்களை அடையாளம் காட்டி உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பும் மக்கள் முன் அவர்கள் செல்ல முடியாத ஒரு நிலையை ஏற்படுத்தியிருக்கின்றது. ராஜபக்ஷக்களில் யாராவது ஜனாதிபதித் தேர்தலில் இறங்கினால் அவமானகரமான தோல்வியை சந்திக்க வேண்டியிருக்கும். அடுத்ததாக வரப்போகும் தேர்தலிலும் அது கடுமையான பாதிப்பை ஏற்படுத்தும்.



இரண்டாவது, பொதுத் தேர்தலை முதலில் எதிர்கொண்டால், ஆட்சியைப் பிடிக்க முடியாவிட்டாலும் கணிசமான ஆசனங்களை கைப்பற்றக் கூடியதாக இருக்கும் என பசில் கணக்குப் போடுகின்றார். பொதுத் தேர்தல் முதலில் வந்தால், சஜித் அணி, ஜே.வி.பி. அணி, என்பற்றுடன் கடுமையான போட்டி ஒன்றை மொட்டு எதிர்கொள்ளும். மொட்டுக்கு எதிரான அலை இன்னும் முற்றாக ஓயவில்லை என்ற போதிலும், அதன் கட்டமைப்புக்களும், ஆதரவுத் தளமும் உறுதியாக இருப்பதால், தம்மால் ஓரளவு ஆசனங்களைக் கைப்பற்றக் கூடியதாக இருக்கும் என்பது பசிலின் கணிப்பு!

2019 நவம்பரில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபாய பாரிய வெற்றியைப் பெற்றிருந்தார். அதனைத் தொடர்ந்து அந்த சூடு தணிவதற்கு முன்னர் 2020 ஓகஸ்ட்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் மொட்டு அணி 145 ஆசனங்களைப் பெற்றது. அதாவது, மூன்றில் இரண்டு பெரும்பான்மை. ஜனாதிபதியாக வருபவரின் கட்சி அதனையடுத்து உடனடியாகவே வரக்கூடிய பொதுத் தேர்தலிலும் வெற்றிபெறுவதை இலங்கையின் தேர்தல்களை ஆராயும்போது காணக்கூடியதாக இருக்கிறது.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றவர் பலமான ஆட்சியை அமைக்க வேண்டும் என மக்கள் விரும்புவதும், ஜனாதிபதித் தேர்தல் வெற்றி அலை ஓய்வதற்கு முன்னரே பொதுத் தேர்தல் நடத்தப்படுவதும் இதற்குக் காரணம்.

முதலில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டால், அதில் யாரை நிறுத்துவது என்ற பிரச்சினை பொதுஜன பெரமுனவுக்கு. ரணிலை ஆதரித்தால், அத்தேர்தலில் ஐ.தே.க., ஐக்கிய மக்கள் சக்தி, ஜே.வி.பி. என்பவற்றின் பரப்புரைகளே ஓங்கியிருக்கும். அதில் யார் வெற்றிபெற்றாலும் தொடர்ந்து வரக்கூடிய பொதுத் தேர்தலில் மொட்டு அணி காணாமல் போய்விடும் அபாயம் இருப்பதாக பசில் அஞ்சுவதாகத் தெரிகிறது.

பொதுத் தேர்தல் முதலில் நடைபெறும் போது முத்தரப்புப் போட்டி இருக்கும் என்பதால், எந்தவொரு கட்சியும் ஆட்சி அமைக்கக்கூடிய அறுதிப் பெரும்பான்மையைப் பெற முடியாது. அதனால், தமது பேரம்பேசும் ஆற்றலைப் பயன்படுத்தலாம் என பசில் கணக்குப் போடுகிறார். சில சமயங்களில் தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்கக்கூடியதாக இருக்கும் என்றும் அவர் நினைக்கிறார்.

அதேவேளையில், பசில் வகுக்கும் இந்த உபாயத்தின் பின்னணியில் மற்றொரு அரசியல் நோக்கமும் இருக்கிறது. பொது ஜன பெரமுனவிலிருந்து பலர் பிரிந்து சென்று ரணிலுடன் இணைவற்குத் தயாராக இருக்கின்றார்கள். ரணிலுக்காக அமைக்கப்படும் கூட்டணியில் அவர்கள் இணையப் போகிறர்கள் என்பது வெளிப்படையானது. பொதுத் தேர்தலை முதலில் நடத்தினால், இந்தப் பிளவைத் தடுக்கக்கூடியதாக இருக்கும் என்றும் பஸில் கருதுவதாக அரசியல் வட்டாரங்கள் சொல்கின்றன.

அரசியலமைப்பின்படி நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் இப்போது ஜனாதிபதிக்கு இருக்கின்றது. அதேவேளையில், நாடாளுமன்றத்தில் அதற்கான பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்து நிறைவேற்றினாலும் நாடாளுமன்றம் கலைக்கப்படும். நாடாளுமன்றத்தில் பொதுஜன பெரமுனக்கு பெரும்பான்மை இருப்பதால் அதனைச் செய்ய முடியும். ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைக்க மறுத்தாலும், அதனைத் தம்மால் செய்ய முடியும் என்ற நிலையில்தான், ரணில் மீதான அழுத்தத்தை பசில் தீவிரப்படுத்தியிருக்கிறார்.

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

# வடக்கு கடலில் நடப்பதென்ன?



**இந்திய மீனவர்களின் அத்துமீறல் காரணமாக வட பகுதி மீனவர்கள் பெரும் பொருளாதார இழப்புக்களை சந்தித்து வருகின்றார்கள். இந்தப் பிரச்சினை தீர்வின்றித் தொடர்வதற்கு யார் காரணம்? இலங்கை அரசாங்கமா? இந்திய அரசாங்கமா?**

இந்திய மீனவர்களின் இந்த ஆக்கிரமிப்பு பல வருடங்களாகத் தொடரும் ஒரு விடயமாக இருக்கின்றது. இதனைக் கட்டுப்படுத்த வேண்டிய பொறுப்பு இலங்கை அரசாங்கத்துக்கே இருக்கின்றது. ஏனெனில் இறைமையுள்ள ஒரு நாடென்ற வகையில், மற்றொரு நாட்டின் மீனவர்கள் உள்நுளையும் போது அவர்களைக் கட்டுப்படுத்துவது அரசாங்கத்தின் கடமை. இலங்கை அரசின் கடற்படை பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்படுகின்றார்கள். அவர்களையும் மீறி இந்திய மீனவர்கள் உள்ளே வருகின்றார்கள் என்றால், அதற்குப் பொறுப்புக் கூற வேண்டியவர்களாக இலங்கை அரசாங்கம்தான் இருக்கின்றது.

**இந்திய மீனவர்களின் இவ்வாறான அத்துமீறல் காரணமாக வடபகுதி கடற்றொழிலாளர்கள் அண்மைக்காலத்தில் தொழில் ரீதியாக, பொருளாதார ரீதியாக எவ்வாறான பிரச்சினைகளை எதிர்கொள்கின்றார்கள்?**

இந்திய மீனவர்களின் அத்துமீறல் வடபகுதி மீனவர்களின் ஜீவனோபாயத்திலும், தொழிலிலும் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தியிருக்கின்றது. அவர்களின் வாழ்வாதார, ஜீவனோபாய மற்றும் அனைத்து வகையான கட்டமைப்புக்களையும் இது பாதித்திருக்கின்றது. அவர்களுடைய பல கோடி ரூபா பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள், கடலில் இருக்கின்ற பல கோடிக்கணக்கான ரூபா பெறுமதியானவளங்களையும் இவ்வாறு அத்து மீறி வரும் இந்திய மீனவர்கள் அழித்திருக்கின்றார்கள். அதாவது, இதனால் மிகப் பெரிய இழப்பு இந்த நாட்டுக்கும், மீனவர் சமூகத்துக்கும் ஏற்பட்டிருக்கின்றது.

**அமைச்சர் டக்ளஸ் தேவானந்த இதற்கான தீர்வு ஒன்றை அண்மையில் முன்வைத்திருந்தார். அதாவது, கடற் சாரணர் பிரிவு ஒன்றை அமைப்பதன் மூலம் இந்த அத்துமீறலை கட்டுப்படுத்தக்கூடியதாக இருக்கும் என்று தெரிவித்திருந்தார். இது குறித்து உங்கள் கருத்து என்ன?**



**இந்திய மீனவர்களின் அத்துமீறலால் வடபகுதி மீனவர்கள் தமது வாழ்வாதாரங்களை இழந்துள்ளார்கள். கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான மீன்கள் தினசரி வடக்கிலிருந்து தமிழக மீனவர்களால் அபகரித்துச் செல்லப் படுகின்றது. இது தொடர்பாக வடபகுதி கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் முகமத் ஆலம் அனைத்துலக உயிரோடைத் தமிழ் வானொலியின் தாயகக்களம் நிகழ்ச்சிக்கு வழங்கிய நேர்காணலை இலக்கின் வாசகர்களுக்காக இங்கேதருகின்றோம் இந்த நேர்காணலை காணொளியில் YouTube இல் முழுமையாகப் பார்ப்பதற்கு இங்குள்ள QR Code இனை ஸ்கான் (Scan) செய்யவும்.**

## முகமத் ஆலம் நேர்காணல்

மீனவர்கள் விடயத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்த நீண்டகாலமாகவே அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றார் என்பதை காணக் கூடியதாக இருந்துள்ளது. பழைய பஸ்களை கடலில் போட்டு அதன்மூலமாக இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கட்டுப்படுத்துவதற்கு முயன்றார். அதன் பின்னர் இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் குறித்து அவர் அக்கறையாக கருத்துக்களை வெளியிட்டு வருகின்ற போதிலும், மீனவர்களின் ஏனைய விடயங்களில் அவர் போதிய கவனம் செலுத்தவில்லை. உள்ளூரில் தடை செய்யப்பட்ட இழுவை மடித் தொழிலை நிறுத்துவது போன்றவற்றில் அவர் கவனம் செலுத்தவில்லை. இந்திய இழுவை மடிப் படகுகள் விடயத்தில் அவர் கவனம் செலுத்துவது புரிகிறது.



கடல் சாரணியர் என்ற ஒரு அமைப்பின் மூலமாக இதனைத் தடுப்பது என்பது சாத்தியமற்றது. ஏற்கனவே ஒரு தீர்மானம் இருக்கின்றது. 2015 ஆம் ஆண்டு இந்திய – இலங்கை மீனவர் பேச்சுவார்த்தையில் ஒரு உடன்பாடு எட்டப்பட்டது. இரு தரப்பு மீனவர்களையும் பயன்படுத்தி கடலை ரோந்து செய்வது என்பதுதான் அந்தத் தீர்மானம். இரண்டு நாட்டு மீனவர்களையும், இரண்டு நாட்டு அரசுகளையும் கொண்டுதான் இதனைச் செய்ய வேண்டும் என்றுதான் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆயுதம் தாங்கிய கடற்படை ஒன்று இலங்கை அரசிடம் இருக்கும் போது, ஒரு தரப்பை மட்டும் உள்ளடக்கியதாக சாரணர் என்ற அமைப்பை உருவாக்கி வெறும் கையுடன் சென்று செயற்படுவது முடியாது. பாரிய படகுகளில் வரும் இந்திய மீனவர்களை இவர்கள் எவ்வாறு தடுக்கப்போகின்றார்கள்? இது சாத்தியமாகுமா? இது வெறுமனே இருதரப்பு மீனவர்களையும் மோத விடும் செயற்பாடாக மட்டுமே முடிந்துவிடும். இரண்டு நாடுகளுக்கும் இடையில் காணப்படும் தமிழ் என்ற வகையிலான அந்த உறவு இந்தச் செயற்பாட்டினால் முறிந்து நாசமாகிவிடலாம். இவ்வாறு பல பிரச்சினைகள் இதில் உள்ளது.

**எல்லையைத் தாண்டி வருவது சட்ட விரோதம், அவ்வாறு வந்தால் கைது செய்யப்படலாம் என்ற அச்சம் இருக்கின்ற போதிலும், இந்திய மீனவர்கள் துணிந்து வருவதற்கு காரணம் என்ன?**

தமது நாட்டில் இருக்கக்கூடிய வளங்களை அவர்கள் ஏற்கனவே அழித்துவிட்டார்கள். அதனால், அவர்களுடைய கடற்பகுதிக்குள் மீனினம் இல்லாத ஒரு நிலை ஏற்பட்டுவிட்டது. இவ்வாறான நிலையில்தான் இலங்கையின் கடற் பகுதிக்குள் இருக்கக்கூடிய மீன்களைப் பிடிப்பதற்காக அவர்கள் இங்கு வருகின்றார்கள். அத்துடன் இலங்கைக் கடற்பகுதிக்குள் இருக்கக்கூடிய கடல் வளங்களைக் கொண்டு செல்வதும் அவர்களுடைய நோக்கங்களில் ஒன்றாக இருக்கின்றது.

**இந்திய மீனவர்களுடைய அத்துமீறலைத் தடுத்து நிறுத்துவதற்கு உங்களுடைய அடுத்த கட்ட நடவடிக்கை என்ன?**

இரு தரப்பு மீனவர்களுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை மூலமாகவே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வைக் காணமுடியும் என நாம் நம்புகின்றோம். இந்த அத்துமீறலைத் தடுத்து நிறுத்துவதற்கான அழுத்தங்களை இந்தியா

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

# இலங்கையின் 76 வருட தொடர் ஏமாற்று அரசியலின் புதிய முகம் அனுர



அண்மைக் காலங்களாக இலங்கை அரசியலில். அடுத்த ஜனாதிபதியாக யார் வரப் போகின்றார். என்ற ஒரு கேள்வியும் அதற்கான போட்டிகளும். காணப்படுகின்ற களச்சூழலின் அடிப்படையில் தற்போதைய பொருளாதாரச் சிக்கலையும் அதற்கான தீர்வையும் மட்டுமே முன்னிறுத்தி அநேக வேட்பாளர்கள் தங்களது கருத்துக்களை முன்வைத்து வருகின்றார்கள். குறிப்பாகச் அந்நியர் ஆட்சியிலிருந்து விடுபட்ட பின் 76 வருட அரசியல் வரலாற்றைக் கொண்ட இலங்கைத் தீவில், தமிழினத்தின் அடிப்படை இனப் பிரச்சினைக்கான தீர்வு குறித்து இதுவரை யாரும் வெளிப்படையான கருத்தையோ அல்லது அதற்கான திட்டமொன்றையோ முன்வைத்ததை நாங்கள் காணக்கூடியதாக இல்லை.



தேசிய மக்கள் கட்சியின் தலைவர் அனுர குமார திசாநாயக்க தலைமையிலான அந்த குழுவினர் அண்மைக் காலமாக யாழ்ப்பாணம் வவுனியா. கிளிநொச்சி போன்ற பகுதிகளில் தங்களுடைய தேர்தல் பிரச்சாரங்களை முன்னெடுத்து வருகின்றார்கள். இதுவரை நடைபெற்ற பிரச்சாரங்களின் போது அனுகுமார அவர்கள் தனது கருத்தைப் பதிவு செய்திருந்தார். அதில் அவர், இலங்கைத் தமிழரின் இனப் பிரச்சனை குறித்து எதையுமே பேசாமலும், மகிந்த அரசும் ரணில் அரசும் கூறுவது போல், சமஷ்டி அல்லது 13++ தருவோம் என்று தான் டீல் போட வரவில்லை என்றும், அவர்களுக்கான தேவை அது அல்ல என்பதையும் கூறியதுடன், இவற்றுக்கு மாறாக இலங்கையின் பொருளாதாரப் பிரச்சினைகளை மாத்திரமே மையப்படுத்தி அவர் தனது உரைகளை முன்னெடுத்திருந்தார்.

எமது ஈழத் தமிழர்களுடைய பிரச்சினை குறித்தும் அதற்கானதொரு நிரந்தரத் தீர்வு குறித்தும் தன்னுடைய பதிவுகளில் எங்குமே அவர் குறிப்பிட தவறிவிட்டார் என்பது கோடிட்டுக் காட்டப்பட வேண்டியதொன்றாகும்.

இரண்டயிரத்து ஒன்பதாம் ஆண்டு மரபு வழியான ஆயுதப் போராட்டம் மௌனிக்கப் பட்டதை தொடர்ந்து ஜனநாயக நீரோட்டத்தின் வழியில் தமிழ்த் தேசிய அரசியலின் முன்நகர்வுகளை தமிழீழ மக்களாகிய நாம் முன்னெடுத்து வருகின்ற சூழலில், அதை ஒட்டியே தமிழ் தேசிய அரசியல் தரப்புகளும் சிவில் சமூகப் பிரதிநிதிகளும் புலம்பெயர் வாழ் தமிழர் அமைப்புகளும் நகர்வுகளை முன்னெடுத்து வருகின்றன.

**திரு. செல்வநாயகம் நேசன்**
தலைமை ஒருங்கிணைப்பாளர்
தமிழ் தேசிய மக்கள் இயக்கம்



குறிப்பாக, 2009 ஆம் ஆண்டு யுத்த மௌனத்திற்குப் பின்பு மாறி மாறி வந்த சிங்கள அரசுத் தலைமைகள் அதாவது இலங்கை அரசாங்கம் இதுவரையிலும் தமிழர்களுக்கான இனப் பிரச்சினையின் நிரந்தர தீர்வு என்று ஒன்றைக் காத்திரமாக முன்வைக்கவில்லை.

காலத்திற்கு காலம் அவர்கள் ஒவ் வொரு விடயங்களை முன்வைத்து காணிப் அதிகாரம், போலீஸ் அதிகாரம், 13, பெடரல் என்கின்ற பலவற்றைப் பேசிய போதும், இவை ஒன்றும் இதுவரை நடைமுறையில் சாத்தியமாக்கப்படவில்லை.

இவ்வாறு காலங்கள் கடந்து செல்கின்ற தருணத்தில் மாறி மாறி வந்த அரசாங்கங்களின் இஸ்த்திரமான பொருளாதாரக் கொள்கை இன்மையும் ஊழலாலும் நயவஞ்சக ஆட்சியின் மூலமாகவும் இலங்கையின் பொருளாதாரம் தள்ளப்பட்டுள்ள இன்றைய நிலையும் நாம் அறிந்த விடயங்களாகும்.

இவ்வாறான பின்னணியில், ஜனாதிபதி கோட்டாபய மக்கள் எழுச்சியின் மூலம் மக்களினால் விரட்டி அடிக்கப்பட்ட வரலாறும் இலங்கையிலே பதிவானது.

அதனைத் தொடர்ந்து அன்று நிலவிய சூழலுக்கு ஏற்ப இலங்கைக்கு ஒரு அதிபர் தேவை என்கின்ற ஒரு இடைக்கால தேர்வுக்காக, மக்களின் அதிகாரம் அளிக்கப்படாத ஜனாதிபதியாக ஜனாதிபதி ரனில் விக்ரமசிங்க அவர்கள் ஆட்சி அதிகாரத்தை பொறுப்பேற்று இருக்கின்றார்

இந்நிலையில் ஈழத் தமிழர்களாகிய நாங்கள் இதுவரை காலமும் எதிர்பார்த்துக் காத்திருந்த ஜனநாயக வழிமுறையானது இந்தக் காலகட்டத்தில் எங்களுக்கு ஒரு எட்டாக்கனியை போன்று தோற்றமளிப்பதற்கு இந்த பொருளாதாரப் பின்னடைவுதான் காரணம் என சிங்களக் கட்சிகளால் காட்சிப்படுத்தப்படுகிறது.

தற்போது ஜனாதிபதி தேர்தல் ஒன்றுக்கான ஆயத்தத்தை அனைத்துத் தரப்பினரும் மேற்கொண்டு வரும் நிலையில்.



அடுத்து ஜனாதிபதியாக வரக்கூடியதும் மக்களின், அதிகமான வாக்குகளைப் பெறக் கூடியதுமானவராக அனுரகுமார திசாநாயக்கா தோற்றமளிக்கின்ற களச் சூழலில் தமிழ் மக்களுடைய வாக்குகளும் அவருக்கு தேவைப்படும் என்கின்ற ஒரு கட்டாயத்தின் அடிப்படையில் தமிழ் மக்களுடைய வாக்குகளை குறிவைத்தும் அனுரகுமார திசாநாயக்கா தனது நகர்வுகளை மேற்கொண்டு வருகின்றார்.

தென்னிலங்கை அரசியல் வட்டாரங்களும் புத்திஜீவிகளும் தற்போது ஆதரவை வாரி வழங்கிக் கொண்டிருக்கின்ற களச்சூழலில் நமது தமிழ் தேசிய அரசியல் பரப்பிலும் அதற்கான பேச்சுவார்த்தைகள் முன்னாயத்தங்கள் ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றது. அநேக தமிழ் பேசும் மக்களும் அனுர குமார திசாநாயக்காவை ஆதரிப்பதன் ஊடாக ஈழத்மிழர்களுடைய, புரையோடி உள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு எட்டப்படலாம் என்கிற ஒரு எண்ணப்பாட்டில் ஆதரவை வழங்கும ஒரு நிலையையும் காணக்கூடியதாக இருக்கிறது. எது எவ்வாறாக இருப்பினும் நாம் கடந்து வந்த வரலாற்றை சற்று திரும்பி பார்க்க வேண்டியது எங்கள் ஒவ்வொருவருடையதும் கடமையாகும். இதுவரை காலமும் ஆட்சிக் கட்டில் ஏறிய அனைத்து அரசாங்கங்களும் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்று முன் தமிழர்களுக்கான தீர்வை அவர்கள் இன்ன விதமாக தருவோம் என்று பல விடயங்களை குறித்து அவர்கள்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# வடபகுதி மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பறித்தெடுத்துள்ள

# இந்திய மீனவர்களின் ஆழ்கடல் மீன்பிடி

தமிழில்: ஜெயந்திரன்

கடந்த சனிக்கிழமை, நள்ளிரவில், வழமை போலவே இந்திய இழுவைப் படகுகளின் ஒரு தொகுதி நெடுந்தீவுக்கு அப்பால் உள்ள கடல் பகுதியில் நுழைந்து ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தன. அந்த நேரம், சிறீ லங்காவின் வடபகுதி கடற்படைக் கட்டளைப் பீடத்தின் நான்காவது பிரிவைச் சேர்ந்த விரைவுப் படகும், சிறீலங்கா கரையோரக் காவற்படையின் விரைவுப்படகும் அந்த இடத்துக்கு விரைந்தன. சிறீலங்காக் கடற்படையின் இந்தப் படகுகள் அந்த குறிப்பிட்ட இடத்துக்குச் சென்று, இந்திய இழுவைப் படகுகளைத் துரத்திச் செல்ல, பெரும்பாலான இழுவைப் படகுகள் அந்த இடத்தை விட்டுச்சென்றுவிட்டன. ஆனால், கடற்படையினரின் எச்சரிக்கையும் பொருட்படுத்தாமல், இரண்டு இழுவைப் படகுகளைச் சேர்ந்த 15 மீனவர்கள் தொடர்ந்து மீன்பிடியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.



அந்த இரு இழுவைப் படகுகளிலுமிருந்து 15 மீனவர்களும் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு, அவர்களது இழுவைப் படகுகளுடன் காங்கேசன்துறைத் துறைமுகத்துக்குக் கொண்டு வரப்பட்டனர். பின்னர் ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றத்தில் அவர்கள் முன்னிலைப்படுத்தப்பட்டு, ஜூலை 21 வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கின்றனர்.

இவ்வருடம், இதுவரை, 74 இந்திய மீனவர்களும், அவர்களது 12 இழுவைப்படகுகளும் ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபட்டதன் காரணத்தால் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர். 2018ம் ஆண்டு இந்த சட்டவிரோத மீன்பிடி முறை ஒரு சட்டத்திருத்தத்தினால் தடைசெய்யப்பட்டிருக்கிறது. கைதுசெய்யப்பட்ட மீனவர்கள் விமானம் மூலம் நாடுகடத்தப்பட, அவர்கள் இழுவைப் படகுகள் அனைத்தும் பறிமுதல் செய்யப்பட்டு அரச உடமையாக்கப்பட்டிருக்கிறது.



இரும்புக் கம்பிப் பாளங்களினாலும், பாரமான உலோகங்களாலும் செய்யப்பட்டிருக்கின்ற இயந்திரமயமாக்கப்பட்ட இந்த இழுவைப்படகுகள், வடபகுதி கடற்பகுதிக்கு



நுழையும் பொழுது, அலுமீனியத்தினால் செய்யப்பட்டிருக்கின்ற சிறீலங்காக் கடற்படைப் படகுகள் எமது நாட்டின் கடற்பகுதியிலிருந்து அவர்களை விரட்டும் போது, பிரத்தியேகக் கவனம் எடுக்கவேண்டியஅவசியம்இருக்கிறது. சிறீலங்காக் கடற்படைப் படகுகளைக் கண்டதும், இந்திய இழுவைப் படகுகள் கூட்டம் இரண்டு மூன்று கடல்மைல்களுக்கு கலைந்து சென்றுவிடுவதால், மட்டுப்படுத்தப்பட்ட வசதிகளைக் கொண்ட இந்த கடற்படைப் படகுகள் நிலைமையைச் சமாளிக்க பல சிரமங்களை எதிர்நோக்குகின்றன.

எங்களது கடற்பிரதேசத்தில், இந்திய மீனவர்களின் நடமாட்டத்தை நாம் அவதானிக்கும் போது, நாம் மேற்கொள்ளும் முதல் நடவடிக்கை, எங்களது படகுகளை ஒரு குறிப்பிட்ட முறையில் செலுத்தி, எமது கடற்பிரதேசத்தை விட்டுச் செல்லுமாறு அவர்களை எச்சரிக்கை செய்வோம். எமது எச்சரிக்கையைப் பொருட்படுத்தாமல் அவர்கள் தொடர்ந்தும் மீன்பிடியில் ஈடுபட்டால், நாம் அவர்களைக் கைதுசெய்வோம். மனிதாபிமானத்தோடு தான் இந்த விடயத்தை நாங்கள் கையாள்கிறோம். எச்சரிக்கை துப்பாக்கிச் சூடு போன்ற வன்மையான நடவடிக்கைகளை நாங்கள் கையாள்வதில்லை என்று கடற்படைப் பேச்சாளரான கப்டன் கயான் விக்கிரமசூரிய சண்டே ரைம்ஸ் பத்திரிகைக்குத் தெரிவித்தார்.



”சிறீலங்கா கடற்படையினர் நடுக்கடலில், தங்கள் இழுவைப்படகுகளைச் சேதப்படுத்தியதோடு தங்கள் மீதும் தாக்குதல்களை மேற்கொண்டதாக” இந்திய மீனவர்கள் குற்றஞ்சாட்டியதாக அண்மையில் அறிக்கைகள் வெளிவந்திருந்தன. 2021 இல் ஒரு இந்திய மீனவர் அவரது இழுவைப்படகு நீரில் மூழ்கிய காரணத்தால் நீரில் மூழ்கி இறந்தார். கடற்படையினர் அந்த விடயத்தில் தாங்கள் எந்தவிதமான தவறும் இழைக்கவில்லை என்று கூறி குற்றச்சாட்டுகளை நிராகரித்திருந்தனர்.

போரினால் ஏற்கனவே பாதிக்கப்பட்டிருக்கின்ற வடபகுதி மீனவர்களைப் பொறுத்தவரையில், இழுவைப்படகுகள் மூலம் மேற்கொள்ளப்படும் இந்த ஆழ்கடல் மீன்பிடி காரணமாக அவர்களது மீன்பிடி கணிசமான அளவு பாதிக்கப்பட்டிருக்கின்றது.



“முன்னரைப் போல இப்போது, போதியளவு மீன்பாடு எமக்குக் கிடைப்பதில்லை. சில நாட்களில் வெறுங்கையினராக அல்லது எமது உணவுக்கு மட்டும் போதக்கூடிய மீன்பிடியுடன் நாம் கடலிலிருந்து வீடு திரும்புகிறோம்” என்று பருத்தித்துறையிலுள்ள ஆதிகோவிலடி மீன்பிடிச் சங்கத்தின் செயலரான இராசேந்திரம் மதியழகன் தெரிவித்தார்.

இந்திய இழுவைப் படகுகளின் ஆழ்கடல் மீன்பிடி காரணமாக சேதமடைந்த தங்கள் மீன்பிடி வலைகள், உடைந்த உபகரணங்கள் என்பவற்றுக்கான இழப்பீட்டை வழங்கும்படி வடபகுதி மீனவர்கள் தொடர்ச்சியாகக் கோரிவருகின்றனர்.

“எமக்கு ஏற்பட்ட சேதங்களைச் சரிசெய்ய இதுவரை ஒரு சதம் கூட அரசால் எமக்கு வழங்கப்படவில்லை. சமுர்த்திக் கடன் எடுத்தே எனது மீன்பிடி வலைகளை நான் வாங்கியிருந்தேன். இந்திய இழுவைப்படகுகளின் காரணமாக எனது வலைகள் கடந்த வருடம் சேதத்துக்கு உள்ளாகியிருந்தன. இவ்விடயம் தொடர்பாகக் குறிப்பிட்ட அதிகாரிகளுக்கு நான் தெரியப்படுத்தி நட்டை ஈட்டைப்பெறுவதற்குப் பதிவுசெய்திருந்தேன். ஆனால் இதுவரை எதுவும் நடக்கவில்லை” என்று மதியழகன் மேலும் கவலையுடன் தெரிவித்தார்.

இந்திய இழுவைப் படகுகளின் ஊடுருவல்கள், சட்டவிரோத மீன்பிடிச் செயற்பாடுகள் மற்றும் ஏற்றுமதியை மையமாகக் கொண்டு அண்மைக்காலத்தில் வடபகுதியில் ஆங்காங்கே தோன்றியிருக்கும் பீர்க்கங்காய்ப் பண்ணைகள் போன்றவற்றின் காரணமாக, வாழ்வாதார ரீதியாகப் பாதிக்கப்பட்டிருக்கும் தங்களைப் பாதுகாக்க, அரசோ அன்றேல் தமிழ் அரசியல்வாதிகளோ இதுவரைமுன்வரவில்லைஎன்றுவடமராட்சியைச் சேர்ந்த மீனவர் தலைவர் கருத்துத் தெரிவித்தார்.

“இழுவைப் படகை உபயோகித்து மேற்கொள்ளப்படும் மீன்பிடியைச் சட்டவிரோதமாக்கிய 2018ம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட சட்டம், என்ன காரணத்துக்காக அமுலாக்கம் செய்யப்படவில்லை?” என்று வடமராட்சி வடக்கின் மீனவ சங்கத்தின் தலைவரான நாகராசா வர்ணகுலசிங்கம் கேள்வி எழுப்பினார்.

சட்ட நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ள

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# தொல் பொருள் எனும் போர்வையில் பறிக்கப்படும் மத சுதந்திரம்

**திருமலையான்**

வவுனியா வடக்கு வெடுக்குநாறி மலையில் இடம் பெற்ற மத அனுஷ்டானங்களின் போதான சம்பவத்தைக் கண்டித்து வடகிழக்கில் பல போராட்டங்கள் வெடித்தது. சிறுபான்மை சமூகம் மீது தொல்பொருள் என்ற போர்வையில் மத சுதந்திரம் பறிக்கப்படுகிறது சிவராத்திரி தினத்தன்று பூசையில் ஈடுபட்ட எண்மரை இதன் போது பொலிஸார் கைது செய்தனர் இதற்காக திருகோணமலை சிவன் கோயிலடி,மூதூரில் இவர்களை விடுதலை செய்யக்கோரிய போராட்டம் 18.03.2024 அன்று இடம் பெற்றது



குறித்த கவனயீர்ப்பை சிவில் சமூகம் இணைந்து ஏற்பாடு செய்திருந்தது. மூதூர் பேருந்து நிலைய வீதியில் இருந்து பிரதேச செயலகம் வரை சென்று பிரதேச செயலாளரிடம் மனு கையளிக்கப்பட்டது.

இதில் ஒன்றிணைந்த சிவில் சமூகம், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர். இலங்கை அரசே எமது வழிபாட்டு உரிமையை உறுதி செய் போன்ற வாசகங்களை ஏந்தியவாறும் இதன் போது கவனயீர்ப்பில் ஈடுபட்டனர். ஊடகங்களுக்கு அதன் அமைப்பாளர் பாஸ்கரன் பிரபாகரன் இவ்வாறு கருத்துரைத்தார். கடந்த எட்டாம் திகதி வெடுக்குநாறியில் நீதிக்கும் சட்டத்துக்கும் புறம்பான கைதை கண்டிக்கிறோம் தொல்பொருள் எனும் போர்வையில் இவ்வாறான தொல்லை கொடுக்கப்படுகிறது தமிழ் பேசும் மக்களை அடக்கி ஒடுக்க நினைக்கின்றனர் ஜனநாயக நாட்டில் சுதந்திரமாக வாழ வழிவிட வேண்டும் .தொல்பொருள் என்ற போர்வையில் ஈடுபடாது நீதியான விசாரணை தேவை கைது செய்யப்பட்ட எண்மரை விடுதலை செய்து தாருங்கள் எனவும் கோரிக்கை விடுக்கிறோம் என்றார்.



திருகோணமலை சிவன் கோயிலடிக்கு முன்னால் 17.03.2024 அன்று ஒரு கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றும் இடம் பெற்றது வழிபாடு எமது அடிப்படை உரிமை ஆதி சிவன் ஆலயம் எமது பூர்வீகம்,ஈழத்தின் சமயத் தலங்களை அபகரிக்காதே தொல்பொருள்எனும்போர்வையில் பௌத்தத்தை விதைக்காதே, வழிபாட்டை தடுக்கும் உரிமையை காவல் துறையினருக்கு கொடுத்தது யார்,ஆலய நிர்வாகிகளை உடனடியாக விடுதலை செய்,ஆலயங்கள் சைவத் தமிழர்களின் பூர்வீக அடையாளம் போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.

வெடுக்குநாறி மலையில் இடம் பெற்ற புனிதமான சிவராத்திரி நாளில் இடம் பெற்ற சம்பவம் அடக்குமுறையானது இதனை காவல் துறையினர் மேற்கொண்டமை கண்டிக்கத்தக்கது என அகத்தியார் அடிகளார் தென்காயிலை ஆதினம் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

தொடர்ந்தும் தெரிவிக்கையில் நாங்கள் வழிபாட்டில் ஈடுபடும் போது இவ்வாறான விடயங்களை மேற்கொள்வது நல்லதல்ல .இந்த நாட்டிற்கு ஒரு சமுதாயத்திற்கு ஏற்றதல்ல இறைவனை வழிபடும் போது அடக்குமுறையான நிகழ்வு சைவத்திற்கு மட்டுமல்ல முழு சமூகத்திற்கும் ஏற்க முடியாது.

ஒட்டு மொத்தமாக வடகிழக்கில் உள்ள ஆலயங்களை தொல்பொருள் என்ற போர்வையில் அபகரிக்க முயற்சிக்கின்றனர் நீதியாக நடக்காமை அடாவடித் தனத்துடன் நடந்து கொண்டு உரிமைகளையும் சுதந்திரத்தையும் தடுத்து நிறுத்துகின்றனர் இந்த நாட்டில் மனித உரிமைகள் சுதந்திரம் பற்றி அரசியல் அமைப்பில் சொல்லப்பட்டாலும் வெறும் எழுத்துருவில் மாத்திரமே அது காணப்படுகிறது.

இச் சம்பவத்தில் வழிபாட்டில் ஈடுபட்டிருந்த போது கைது செய்யப்பட்ட ஆலய பூசகர் உள்ளிட்ட 8 பேரும் வவுனியா நீதிமன்றத்தால் 19.03 2024 அன்று விடுதலை செய்யப்பட்டுள்ளதுடன், வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.



கடந்த 8 ஆம் திகதி சிவராத்திரி பூஜை வழிபாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது வெடுக்குநாறி மலை ஆதி சிவன் ஆவயத்தில் வைத்து ஆலய பூசகர் உள்ளிட்ட 8 பேர் பொலிசாரால் கைது செய்யப்பட்டு 9 ஆம் திகதி வவுனியா நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

கடந்த 12 ஆம் திகதி வழக்கு விசாரணை மீள எடுக்கப்பட்ட போது, 19 ஆம் திகதி (இன்று) வரை பொலிசாரின் கோரிக்கைக்கு அமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். இன்றைய தினம் (19.03) மீண்டும் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது பொலிசார் அவர்கள் மீதான குற்றச்சாட்டை நிரூபிக்க தவறிய காரணத்தால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு 8 பேரும் விடுவிக்கப்பட்டனர்.

இது தொடர்பில் சட்டத்தரணி என். சிறிகாந்தா கருத்து தெரிவிக்கையில், கடந்த சிவராத்திரி தினத்தன்று வெடுக்குநாறிமலை ஆதி சிவலிங்கேஸ்வரர் ஆலயத்தில் சிவராத்திரி வழிபாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது பொலிசாரால் கைது செய்யப்பட்டு கொடுமைப்படுத்தப்பட்டு, நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்ட நிலையில் பொலிஸ் தரப்பில் தொல்பொருள்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்த நிலையில் வவுனியா நீதிமன்றம் அனைவரையும் கடந்த 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கின்ற உத்தரவை வழங்கியிருந்தது.




பொலிசாரையும் விசாரணையை துரிதப் படுத்தி பூரணமான அறிக்கை ஒன்றை தாக்கல் செய்யுமாறு தெரிவித்திருந்தது. கடந்த 12 ஆம் திகதி இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது சந்தேக நபர் சார்பில் ஆஜராகிய சட்டத்தரணிகள் பொலிஸ் தரப்பில் சொல்லப்பட்ட பல்வேறு விடயங்களையும் ஆட்சேபித்து, எந்தவொரு இடத்திலும் சட்டம் மீறப்படவில்லை என்ற நிலைப்பாட்டை வலியுறுத்தி, தொல்பொருட்கள்கட்டளைச்சட்டம் பொலிஸ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அவதானிக்கின்ற போது இதற்கு பொருந்தாது என்று சுட்டிக் காட்டப்பட்டு அவர்களுக்கு பிணை வழங்குமாறு வாதிட்டோம்.

ஆயினும், பொலிஸ் தரப்பில் குறித்த கட்டளைச் சட்டத்தின் பிரிவு 15 உப பிரிவு சீயினை சுட்டிக்காட்டி அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட வேண்டும் என மீண்டும் கோரப்பட்டது. அந்நிலையில் அறிவு சார் நீதவான் அவர்கள் இந்த விசாரணை முடிவுறுத்தப்பட்டு பொலிஸ் தரப்பில் இறுதி அறிக்கை வடிவில் பிராத்து எனப்படும் குற்றப்பத்திரம் தாக்கல் செய்வதற்கு பொலிசார் கோரியவாறு ஏற்றுக் கொண்ட ஒருவார கால அவகாசத்தை வழங்கியிருந்தார்.




இன்று (19.03) வரை சந்தேக நபர்கள் அனைவரையும் விளக்கமறியலில் வைக்கும் உத்தரவை வழங்கியிருந்தார். மீண்டும் இன்றைய தினம் (19.03) வழக்கு எடுத்துக் கொள்ளப் பட்ட போது, சட்டமா அதிபருடைய ஆலோசனையையும், அறுவுறுத்தல்களையும் பெறுவதற்காக வழக்கின்விசாரணைகோவையையும்,தங்கள்வசம் இருக்கும் அனைத்து கோவைகளையும் சட்டமா அதிபரின் பரிசீலனைக்காக தாங்கள் அனுப்ப வேண்டி இருப்பதால் இன்றைய தினம் (19.03) குற்றப்பத்திரத்தை தாக்கல் செய்ய முடியவில்லை எனவும் மன்றில் தெரியப்படுத்தினர்.

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# நாற்காலிகளை சூடேற்றும் பிரதிநிதித்துவங்கள்

துரைசாமி நடராஜா

தேர்தல் முறை மாற்றம் மற்றும் தேர்தல் சட்ட திருத்தம் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருகின்றது. இதேவேளை நடைமுறை தேவைகளுக்கேற்ப சட்டங்களை திருத்துவதற்கும் அரசியல் கட்சிகளின் ஒழுக்கத்தை பேணுவதற்கும் தேவையான பரிந்துரைகளை முன்வைப்பதற்காக பத்து உறுப்பினர்களைக் கொண்ட புதிய ஆணைக் குழு ஒன்றை ஜனாதிபதி ஏற்கனவே நியமித் திருக்கின்றார்.



இந்த ஆணைக்குழு தமது அறிக்கையை ஆறு மாதங்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டுமென அரசாங்கம் வலியுறுத்தியுள்ளது. இந்நிலையில் அரசியலில் பெண்கள் மற்றும் இளைஞர்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரித்தல் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் ஆணைக்குழு கவனம் செலுத்தவுள்ளது.

இது ஒரு சிறப்பம்சமாகும் என்பதோடு இந்நடவடிக்கையானது மலையகப் பெண்கள் உள்ளிட்ட சகல தரப்பினரும் தமது உரிமை மற்றும் தீர்மானம் மேற்கொள்ளும் இடங்களில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு உந்துசக்தியாக அமையும் என்று கருதப்படுகின்றது. மலையக இளைஞர்களும் இதனால் நன்மையினைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

ஒரு சமூகத்தின் அபிவிருத்தியில் பெண்கள் மற்றும் இளைஞர்கள் என்போர் முக்கியத்துவம் மிக்கவர்களாக கருதப்படுகின்றனர். இவர்களால் தேசம் செழுமை பெறுகின்றது. பெண்கள் உழைப்பின் அச்சாணியாகத் திகழ்வது மட்டுமன்றி குடும்பத்தின் குத்து விளக்காக இருந்து ஒளி கொடுக்கின்றார்கள். மலையகப் பெண்களைப் பொறுத்தவரையில் அவர்களின் அர்ப்பணிப்பு நாடுயர, வீடுயர அவர்கள் செய்யும் சேவை அளப்பரியது.

தேயிலைத் தொழிற்றுறை, ஆடைத் தொழிற்றுறை, மத்திய கிழக்கு நாடுகளில் வேலைவாய்ப்பு, அரசாங்க தொழில் என்று பல துறைகளிலும் ஈடுபட்டு இப்பெண்கள் தேசிய வருவாய்க்கு அதிகரித்த பங்களிப்பினை நல்கி வருகின்றனர். எனினும் இவர்களின் வாழ்க்கை நிலைமைகள் இன்னும் குறிப்பிடத்தக்க எழுச்சி பெறாமை தொடர்பில் பலரினதும் விசனப் பார்வைகள் இருந்து வருகின்றன. இந்நிலையில் இவர்களின் அபிவிருத்திக்கு வலு சேர்க்க வேண்டியதன் அவசியமும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை இளைஞர்கள் என்று நோக்குகையில் உலக வரலாறுகளை நல்ல படியாக மாற்றியமைத்தவர்களாக அவர்கள் விளங்குகின்றனர். உழைக்கும் படையினர் என்ற ரீதியில் இவர்கள் மிகுந்த முக்கியத்துவம் பெற்றவர்களாக விளங்குகின்றனர். எனவே



இவர்களின் கருத்துக்கள், சிந்தனைகள் என்பன உள்ளீர்க்கப்பட்டு மேலான அபிவிருத்திக்கு வழிசமைக்கப்பட வேண்டும் என்ற கருத்துக்கள் ஓங்கி ஒலிக்கின்றன. எனினும் நடைமுறையில் இது எந்தளவுக்கு சாத்தியமாகியுள்ளது என்பது குறித்து சிந்திக்க வேண்டியுள்ளது.

இதனிடையே மலையக இளைஞர்களை அரசியல்வாதிகள் தமது தேவைக்காக பயன்படுத்திவிட்டு பின்னர் தூக்கி எறிந்து விடுவதாக ஒரு குற்றச்சாட்டும் இருந்து வருகின்றது. பெண்கள், இளைஞர்கள் என்ற இரு சாராரும் நாட்டில் முக்கியத்துவம் மிக்க பிரஜைகளாக காணப்பட்டபோதும், அவர்களால் நாடு செழுமை பெறுகின்றபோதும் அவர்களின் தேவைகள், அபிலாஷைகள் போன்றன உரியவாறு நிறைவேற்றி வைக்கப்படுகின்றதா?, அவர்களுக்கான உரிமைகள் உரியவாறு உறுதிப்படுத்தப்படுகின்றதா? சமூகத்தில் உரிய இடம் அவர்களுக்கு வழங்கப்படுகின்றதா?, அவர்களின் கோரிக்கைகள் அங்கீகரிக்கப்படுகின்றதா? என்பதெல்லாம் கேள்விக்குரிய விடயமாக மாறி இருக்கின்றது. எனவேதான் பெண்ணிலைவாதிகள்பெண்களின்உரிமைகளைஉறுதிப்படுத்துவது குறித்து ஆழமாக கவனம் செலுத்துகின்றனர்.

### அரசியலில் பெண்கள்

பெண்கள் அரசியலுக்கு பொருத்தமற்றவர்கள். அவர்களை அரசியலில் உள்ளீர்க்கக்கூடாது என்ற எண்ணக்கரு ஆரம்பத்தில் இருந்தே காணப்பட்டது. பிளேட்டோ, அரிஸ்டாட்டில் ஆகியோரின் சில கூற்றுக்களும், பண்டைய இந்திய வரலாறும் இதை உறுதிப்படுத்துகின்றன. பெண்கள் தமது வாக்குரிமையை பெற்றுக் கொள்வதற்கு கடந்த காலத்தில் பல்வேறு போராட்டங்களிலும் ஈடுபட்டிருந்ததனை அறிந்து கொள்ள முடிகின்றது. அவர்கள் மேற்கொண்ட சகல போராட்டங்களின் விளைவாகவே வாக்குரிமையை பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது.



சர்வசன வாக்குரிமை தொடர்பான பிரச்சினை, குறிப்பாக பெண்களுக்கும், இந்திய தொழிலாளருக்கும் வாக்களிக்கும் உரிமை பற்றிய பிரச்சினை 1928 ம் ஆண்டு மிகுந்த வாத பிரதிவாதங்களை ஏற்படுத்தி இருந்தது. சட்ட நிர்வாக சபையில் சிங்களவரின் பிரதிநிதி ஒருவரைத் தவிர ஏனைய அங்கத் தவர்கள் அனைவரும் இந்தியருடைய வாக்குரிமையால் அரசியல் ரீதியாக செயலற்றுப் போய்விடுவோம் என்று கூறினர். டொனமூர் ஆணைக்குழுவினுடைய சிபாரிசில் அபாய அறிவித்தலாக அமைந்தது, இந்தியத் தொழிலாளருக்கு வாக்குரிமையளிக்கும் பிரேரணை என்று டீ.எஸ்.சேனநாயக்கா தெரிவித்திருந்தார்.

1931 ம் ஆண்டில் டொனமூர் ஆணையம் பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமையை வழங்குவதற்கு முன்மொழிந்தது. இதனால் கிளம்பிய பல எதிர்ப்புகளுக்கு மத்தியில் டொனமூர் ஆணையத்தை பிரதிநிதித்துவப் படுத்திய பிரிட்டிஷ் தொழிலாளர் கட்சியின் உறுப்பினர் டிரம்மன் பிலிப் பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமையை வழங்குவது மிகவும் பொருத்தமானது என்ற நிலைப்பாட்டை உறுதியுடன் கடைப்பிடித்தார்.



ஆகவே 1931 ம் ஆண்டில் டொனமூர் ஆணைக்குழு ஆண்களைப் போலவே பெண்களுக்கும் வாக்குரிமையை பெற்றுக் கொடுக்க முடிவுசெய்தது. இதேவேளை பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்தில் முதன் முதலாக தொழிலாளவர்க்கத்திற்கும், பெண்களுக்கும் வாக்குரிமை வழங்கியமை இரு முக்கிய விளைவுகளை ஏற்படுத்தியது. அதில் முதலாவது இடதுசாரி இயக்கங்களை தேர்தல் அரசியலுக்கு இட்டுச் சென்றது. இரண்டாவது 60 ஆண்டுகளுக்கு (1927 - 1986) தோட்டத் தொழிலாளர்களின் முக்கிய போராட்டம் வாக்குரிமை பெறுவதாக அமைந்தது.



சட்ட சபையில் முதன் முதலாக தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் அங்கத்தவர் திரு மதி அட்லின் மொலமுரே ஆவார். இவர் ருவன்வெல்ல ஆசனத்தில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் 1931 ம் ஆண்டு ருவன்வெல்ல ஆசனத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்ற ஜே.எச்.மீதெனிய அவர்களின் மகளாவார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதேவேளை 1947 தொடக்கம் 1977 வரையான காலப்பகுதியில் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்ட 21

தொடர்ச்சி 10 ஆம் பக்கம்

## நாற்காலிகளை... தொடர்ச்சி ...

*பெண்களில் 14 பேர் இடதுசாரி கட்சிகளைச் சார்ந்தவர்களாவர்.*

*ஆனால் 1977 ம் ஆண்டு தெரிவுசெய் யப்பட்ட 04 பெண்களில் 03 பெண்கள் ஐக்கிய தேசியக்கட்சியையும், ஒருவர் சிறீலங்காசுதந்திரக் கட்சியையும் சார்ந்தவராக இருந்தனர். 1989 ம் ஆண்டு ஐ.தே.க.வில் இருந்து 08 பெண்களும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து நான்கு பெண்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.' பிரதமர் பதவி போன்ற மிகப் பொறுப்புள்ள பதவியானது ஆண் ஒருவராலேயே வகிக்கப்பட வேண்டும்.*

*இப்பொறுப்பை ஒரு பெண்ணின் மீது சுமத்துவது நாட்டை அழிவை நோக்கி தள்ளுவதற்கு வகைசெய்வதற்கு சமனாகும் ' என்று சிலுமின பத்திரிகை 1960 இல் ஆசிரியர் தலையங்கம்தீட்டிஇருந்தது. எனினும்சிறிமாவோ பண்டாரநாயக்க இதனைத் தகர்த்தெறிந்து உலகத்தில் முதல் பெண் பிரதமரான வரலாறு காலத்தால் அழிக்க முடியாததாகும்.*

*இதேவேளை சிறிமாவோ பண்டாரநாயக் காவின் புதல்வியான சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா அரசியலில் ஆழக்கால் பதித்த ஒருவராக விளங்குகின்றார். 1991 இல் மேல் மாகாண சபையின் முதலமைச்சராக கடமை யாற்றிய அவர் இலங்கையின் ஜனாதிபதியாக பெருமை சேர்த்தவராகவும் விளங்குகின்றார்.*

*இந்த வகையில் பெண்கள் அரசியலில் பங்கேற்பதென்பது பல்வேறு சாதக விளைவுகள் ஏற்படுவதற்கும் அடிப்படையாகும். எனினும் ஆணாதிக்க சமூகத்தில் பெண்கள் புறந்தள்ளப் படுவதும், அவர்களின் அரசியல் உரிமைகள் மறுக்கப்படுவதும் தொடர்ச்சியாகவே இடம் பெற்று வருகின்றது. இந்நிலை மாற்றப்பட்டு பெண்களின் பிரதிநிதித்துவம் அரசியலில் அதி கரிக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமாகும்.*

*இதனை உறுதிப்படுத்தும் வகையில் இலங்கை அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளமை பாராட்டத்தக்கதாகும். நடைமுறை தேவைகளுக்கேற்ப தேர்தல் சட்டங்களை திருத்துவது உள்ளிட்ட பல நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு ஜனாதிபதி புதிய ஆணைக்குழுவொன்றை நியமித்துள்ள நிலையில் பெண்கள் மற்றும் இளைஞர்களின்பிரதிநிதித்துவத்தைஅதிகரிக்கும் வகையில் இக்குழு நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளது.*

*மேலும் இலங்கையிலுள்ள வாக்காளர் களுக்கும் அரசியல் கட்சிகளுக்கும் இடையில் நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து, சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட அமைப்புக்கள் மற்றும் உள்ளக பாராளுமன்ற ஒன்றியம் உள்ளிட்ட பல அமைப்புக்கள், அரசியல் கட்சிகளின் வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்பு கூறலுக்காக முன்மொழிந்திருக்கும் நியதிகள் தொடர்பிலும் ஆணைக்குழு கவனம் செலுத்த வுள்ளது.*

### வேலைநேரம் அதிகம்

*பெண்கள் நாட்டில் இன்று பல்வேறு சவால்களுக்கும் முகம் கொடுத்து வருகின்றனர். நாளுக்கு நாள் புதுப்புது வடிவத்தில் சவால்கள் மேலெழும்பி வருகின்றன. அதிலும் மலையக பெண்கள் எதிர்கொள்ளும் சவால்கள் நாட்டில் ஏனைய பெண்கள் எதிர்கொள்ளும் சவால்களில் இருந்தும் மாறுபட்ட ஒன்றாக காணப்படுகிறது. இவர்களின்வேலைநேரம்அதிகமாகவுள்ளதோடு உழைப்பிற்கேற்ற ஊதியம் என்பது இப்போது கானல் நீராகியுள்ளது. தொழில் நிலையில் பல்வேறு உரிமை மீறல்களுக்கும், பாலியல் ரீதியான சுரண்டல்களுக்கும் இவர்கள் உள்ளாகி வருகின்றனர்.*

*மலைச்சரிவுகளில் இவர்கள் ஏறிஇறங்கி வேலைசெய்யவேண்டி உள்ளதால் பிரசவம் தொடர்பான உடற்கோளாறுகளினால் இப் பெண்கள் துன்பப்படுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மேலும் இரும்புச் சத்து குறைவு, இரத்த அழுத்த நோய், பெருவிரல், ஆட்காட்டி விரல்கள் புண்ணாதல், தோள் பட்டை, முதுகெலும்பு வலி, காலில் ஆணி ஏற்படல் போன்ற பல நோய்களுக்கும் ஆளாவதாக ஆய்வுகள் வலியுறுத்துகின்றன. ஆணாதிக்க சமூகம் இவர்களுக்கு வாய்ப்பூட்டு போட்டு வைத்துள்ளது. தான் உழைக்கும் பணத்தைக் கூட கணவனிடம் கொடுத்துவிட்டு கைகட்டி வாய்பொத்தி நிற்கும் கொடுமை மலையகத்தில்தான் இடம்பெறுகின்றது.*

*பெண்கள் தொடர்பான தீர்மானங்களை ஆண்களே மேற்கொள்வதாகவும் கவலை தெரிவிக்கப்படுகின்றது. இது பெண்களுக்கு இழைக்கப்படும் மிகப்பெரும் அநீதியாகும் என்றும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இவற்றோடு தலைமைத்துவம் வழங்கப்படாது பெண்கள் ஒடுக்கப்பட்டு வருவதாகவும் விசனங்கள் இருந்து வருகின்றன.*

*இதுபோன்றே இளைஞர்களின் பிரச்சி னைகள் அதிகமுள்ள நிலையில் அவை பெரும்பாலும் மூடி மறைக்கப்படுகின்றன. அவர்கள் தொடர்பான தீர்மானங்களை முதியோர்களே மேற்கொள்கின்றனர். மலையக அரசியல்வாதிகள் இளைஞர் அபிவிருத்தி கருதி காத்திரமான பணிகளை முன்னெடுக்க வேண்டும் என்றெல்லாம் விமர்சனங்கள் இருந்து வருகின்றன.*

*இந்நிலையில் அரசியலில் பெண்கள் மற்றும் இளைஞர்களின் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்படும் நிலையில் அவர்கள் தொடர் பான பிரச்சினைகளை அவர்களே உரிய இடங்களில் முன்வைப்பதற்கும், அழுத்தத்தின் ஊடாக தீர்வினை பெற்றுக் கொள்வதற்கும் வாய்ப்பு ஏற்படும் என்பதை மறுப்பதற்கில்லை. இதேவேளை பிரதிநிதித்துவத்தினை பயன் படுத்தி பிரதிநிதிகள் ஆக்கப்பூர்வமான செயற் பாடுகளை மேற்கொள்ள வேண்டும். அதைவிடுத்து நாற்காலிகளை சூடேற்றும் பிரதிநிதித்துவங்களால் சமூக அபிவிருத்தி சாத்தியமாகாது என்பதையும் கூறியாக வேண்டும்.*

• • •

## இந்தியாவிலு... தொடர்ச்சி ...

தேர்தல் அறிக்கை உருவாக் கப்பட்டுள்ளது. இது தி. மு. க. தேர்தல் அறிக்கை மட்டுமல்ல தமிழக மக்களின் தேர்தல் அறிக்கை யாக அமைந்துள்ளது.

*2014இல் ஆட்சிக்கு வந்த பாசிச பா. ஜ. க. இந்தியாவை பாழ்படுத்திவிட்டது. இந்தியாவின் கட்டமைப்புகள் அனைத்தும் சிறுக, சிறுக சிதைக்கப்பட்டுள்ளன. கையில் கிடைத்த வாய்ப்பை பா. ஜ. க. நழுவவிட்டது. இனியும் பா. ஜ. க. ஆட்சி தொடர்வது நாட்டுக்கு நல்லதல்ல. மக்கள் ஆட்சியை செம்மைப்படுத்தும் ஆட்சியாக புதிய ஆட்சி அமைய வேண்டும். அத்தகைய ஆட்சி அமைந்த பின்னர் தமிழக மக்களுக்கு செய்யக் கூடியவற்றை இந்தத் தேர்தல் அறிக்கையில் விளக்கியுள்ளோம்" என்றார்.*

*அந்த அறிக்கையில், மாநிலங் கள் உண்மையான சுயாட்சி பெறும் வகையில் அரசமைப்பு திருத்தப் படும், ஆளுநருக்கு அதிக அதிகாரம் வழங்கும் பிரிவு 361 நீக்கப்படும், உச்ச நீதிமன்றக் கிளை சென்னையில் அமைக்கப்படும், புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து வழங்கப்படும், ஒன்றிய அரசின் பணிமனைகளில் தமிழ்மொழி பயன்படுத்தப்படும், அனைத்து மாநில மொழிகளுக்கும் சமஅந்தஸ்து வழங்கப்படும், 'இலங்கைத் தமிழர்களுக்கு இந்திய குடியுரிமை வழங்கப்படும் என்பன அடங்கிய விடயங்கள் வாக்குறுதிகளாக அளிக்கப்பட்டுள்ளன.*

## உக்ரைனுக்கு ... தொடர்ச்சி ...

*எனினும் உக்ரைனுக்கு அனுப்பப்படும் 2000 படையினர் மீது ரஸ்யாவின் தாக்குதல் தீவிரமாக இருக்கும் என்ப தால் அவர்கள் அங்கு நிலை கொண்டிருப்பது கடினமான விடயம் என்ற அச்சம் பிரான்ஸ் படையினரிடம் எழுந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.*

*இதனிடையே, ரஸ்யாவுடன் மிகப் பெரும் மோதல் ஒன்றிற்கு பிரான்ஸின் படை யினர் தயாராக உள்ளதானர். பிரான்ஸ் 30 நாட்களில் 20,000 படையினரை திரட்டும், நேட்டோவில் உள்ள ஏனைய நாடுகள் 40,000 படையிரை திரட்டு வார்கள், எனவே 60,000 படையினர் உக்ரைனுக்கு உதவியாக செல்வார் கள் என பிரான்ஸ் தரைப்படைகளின் கட்டளை அதிகாரி ஜெனரல் பியேரேசிலி தெரிவித்துள்ளார். இது தொடர்பில் பிரான்ஸ் வெளிப்படையாக ஏற்கனவே அறிவித்துள்ளது. உக்ரைனில் ரஸ்யாவுக்கொதிராக போரிடுவது பிரான்ஸின் தற்பாதுகாப்புக்கு அவசியமானது. அனைத்து லகத்தின் கருத்துக்கள் எவ்வாறு இருந்தாலும் பிரான்ஸ் போருக்கு தயாராகின்றது. இந்த போர் மிகவும் கடுமையானதாக இருக்கும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.*

*பிரான்ஸ் படையின் பலம் என்பது அதன் கூட்டணி நாடுகளின் வலிமையில் தங்கியுள்ளதுடன், அதன் பாதுகாப்பு அணு ஆயுதங்களின் பலத்தில் தங்கியுள்ளது. ஆனால் அதனை பிரான்ஸ் பயன்படுத்துமாக இருந்தால் இது அணுவாயுதப்போராக மாற்றம் பெறலாம் என கூறப்படுகின்றது.*

## முள்ளிவாய்க் ... தொடர்ச்சி ...

தளங்களில் அதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது.

*முள்ளிவாய்க்கால் வரை சென்ற அனை வருக்கும் தனித் தனிக் கதைகள் உண்டு. அந்த வகையில் ஈழநாதம் நாளிதழில் அலுவலகச் செய்தியாளராகப் பணியாற்றிய சுரேன் கார்த்தி கேசு அவர்கள் போரின் சாட்சியாக இருந்து தன் முன்னே நடைபெற்ற சம்பவங்களை எழுதியதோடு மட்டுமில்லாமல் தான் எடுத்த படங்களையும் ஒளிப்பட ஆதாரமாக இணைத்து (பல படங்கள் இதுவரை வெளிவரவில்லை) "போரின் சாட்சியம்" எனும் பெயரில் வெளியிட ஏற்பாடு செய்துள்ளார்.*

*2009 இற்குப்பிறகு முள்ளிவாய்க்கால் சார்ந்து வரும் மிகக் காத்திரமான ஆவணப் படைப்பாக இந்நூல் இருக்கும்.*

**நூல் வெளியீடு காணும் அரங்கு** :
*Pfarrei St. Karl*
*Spitalstrasse 93*
*6004 Luzern.*
*நாள் : 12.05.2024*
*நேரம் : மாலை மூன்று மணி.*

## கணணிகளை ... தொடர்ச்சி ...

என கூறப்படுகின்றது. அதிக நேரம் கணணிகளை *பார்ப்பதால் ஆண் களில் follicle-stimulating hormone (FSH) என்ற இரசாயணப்பொருளின் அளவுகளில் ஏற்படும் மாற்றமே மலட்டுத்தன்மைக்கு காரணம் என கூறப்படுகின்றது.*

*சீனாவில் சிறுவர்கள் கணணிகளில் விளையாடுவதற்கான நேரம் மட்டுப்படுத்தப் பட்டுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.*

## பஸிலுக்கு... தொடர்ச்சி ...

ஆனால், நாடாளுமன்றத்தை முன்கூட்டியே கலைப்பதில் ஜனாதிபதிக்கு மற்றொரு தடை இருக்கின்றது. நாடாளுமன்றத்துக்கு முதல் தடவையாகத் தெரிவானவர்கள் தமக்கான ஓய்வூதியத்தையும், வரி விலக்குடனான வாகனத்தையும் பெறுவதற்கு நான்கு வருடங்களாவது பதவி வகித்திருக்க வேண்டும். எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் வரை அதற்காக அவர்கள் காத்திருக்க வேண்டும். ஜனாதிபதிப் பதவிக்காக 2022 ஜூலையில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் வாக்குகளைக் கோரிய போது பொதுஜன பெரமுன உறுப்பினர்களுக்கு முக்கியமான வாக்குறுதி ஒன்றை ரணில் கொடுத்திருந்தார். அதாவது, நாடாளுமன்றம் முன்கூட்டியே கலைக்கப்படமாட்டது என்பதுதான் அந்த வாக்குறுதி. அதனை அவர் மீறமாட்டார் என அவர்கள் நம்புகிறார்கள்.

ஆனால், இவ்விடயத்தில் தன்னுடைய நிலைப்பாடு என்ன என்பதை ஜனாதிபதி பகிரங்கமாகத் தெரிவிக்கவில்லை. ஆனால், முன்கூட்டியே பொதுத் தேர்தல் நடத்தப்படாது என்று ஐ.தே.க.வின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்திருப்பது ரணிலின் கருத்தாக இருக்கலாம். "அரசியலமைப்பின்படி ஜனாதிபதித் தேர்தல் செப்ரெம்பர் 16 க்கும் ஒக்ரோபர் 16 க்கும் இடையில் நடத்தப்படும் " என அவர் கூறியிருக்கின்றார். "பொதுத் தேர்தல் அதற்குரிய நேர அட்டவணைப்படி 2025 ஓகஸ்ட்டில் நடத்தப்படும்" என்றும் அவர் தெரிவித்தார்.

ரணிலைப் பொறுத்தவரை அவரது ஐக்கிய தேசியக் கட்சியின் கட்டமைப்புக்கள் எதுவுமே பலமாக இல்லை. பொதுத் தேர்தல் ஒன்றை எதிர்கொள்வது அவரைப் பொறுத்தவரையில் கட்சியையே காணாமல் போகச் செய்துவிடும். அதன்பின்னர் வரக்கூடிய ஜனாதிபதித் தேர்தலில் அவரும் காணாமல் போய்விடுவார். இது ரணிலுக்குத் தெளிவாகத் தெரியும்!



"பொருளாதார நெருக்கடியைத் தீர்த்தவர். எதிர்காலத்துக்கும் தேவையானவர்" தீர்க்கக்கூடியவர்" என்ற பெயருடன் ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்வதுதான் அவரது உபாயம். அதன் பின்னர் அந்த வெற்றியை வைத்துக்கொண்டு பொதுத் தேர்தலில் கூட்டணிகளை அமைத்து எதிர்கொள்ள முடியும் என அவர் கணக்குப் போடுகிறார். அதன்மூலம் தமக்குச் சாதகமான ஒரு அரசாங்கத்தை அமைத்துக்கொள்ளலாம் என அவர் நம்புகிறார்.

இந்த இடத்தில்தான் பசிலின் அழுத்தத்தை எப்படி எதிர்கொள்வது என்பது ரணிலுக்குப் பெரும் தலையிடியாக மாறியிருக்கின்றது.

இவ்விடயத்தில் இறுதி முடிவை எடுக்க வேண்டியவர் ஜனாதிபதிதான். அவர் மீதான பசிலின் அழுத்தம் கடுமையாக இருக்கும் என்பதும் உண்மை. ஆனால், நாடாளுமன்றத்தில் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்து அதனைக் கலைப்பதற்கு பசில் திட்டமிட்டாலும், முதல் தடவையாக நாடாளுமன்றத்துக்கு வந்த அவரது கட்சியினர் அதனை ஆதரிப்பார்களா என்ற கேள்வியும் இருக்கின்றது.

ரணில் - பஸில் இரண்டாவது சந்திப்பும் பசிலுக்குத் திருப்தியளித்ததாகத் தெரியவில்லை. அதிகாரம் ரணிலிடம் இருப்பதால் அவரது கைகள்தான் மேலோங்கியிருக்கின்றது. ராஜபக்ஷக்களின் ஆதரவு அவருக்குத் தேவையாக இருந்தாலும், தேர்தல் விடயத்தில் அவர்களைத் தடுமாற வைக்கும் வகையில் ரணில் காய் நகர்த்துகிறார்.

தமது (குடும்பத்தின்) இருப்பைத் தக்க வைப்பதற்கு இதனை பேரம்பேசுவதற்கான ஒரு விடயமாக பசில் பயன்படுத்தலாம். விறுவிறுப்பான காட்சிகளை அடுத்த வாரத்திலும் எதிர்பார்க்கலாம்.

• • •

## வடக்கு கடலில்... தொடர்ச்சி ...

வுக்குக் கொடுப்பதற்கான வலு இலங்கை அரசாங்கத்துக்கு இல்லை. எனவே, மீனவர்களுக்கு இடையிலான புரிந்துணர்வின் மூலமாகவே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வைக்காணக்கூடியதாக இருக்கும்.

தமிழக மீனவர்கள் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். இங்குள்ள தமிழ் பேசும் மக்கள் - தொப்புள் கொடி உறவுகள் - இந்திய நாட்டின் மீது ஒரு எதிர்பார்ப்போடு உள்ள மக்கள் அவர்கள் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். இங்குள்ள வளங்கள் இங்குள்ள மக்களின் பயன்பாட்டுக்குத் தேவை என்பதையும் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். இதனை வெறுமனே அரசியலாக்குவதற்கோ, அல்லது அரசியல் காரணங்களுக்காக இரு நாட்டு மக்களின் உறவுகளையும் முறித்துக்கொள்ள இங்குள்ள – வடபகுதி மக்கள் விரும்பவில்லை. இவ்வாறான நிலையில் தமிழக மீகவர்களும் சிந்திக்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு.

பேச்சுவார்த்தை என்று வரும்போது இரு தரப்பு மீனவர்களும் விட்டுக்கொடுத்துப் பேசுவதற்குத் தயாராக இருக்கின்றார்கள். ஆனால், தமிழகத் தரப்பில் இருந்துதான் சந்தேகமான பார்வை தொடர்ந்தும் இருக்கின்றது. ஏனெனில் தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகளை நீண்டகாலமாக நாம் நடத்திவந்திருக்கின்றோம். ஆனால் அடிமடி வலை என்ற தொழில் முறையிலிருந்து மாறுவதற்கு அவர்கள் முன்வைக்கின்ற நிபந்தனைகள் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை. இரண்டு வருடம் தாருங்கள், நான்கு வருடம் தாருங்கள் இந்த தொழிழ் முறையிலிருந்து நாங்கள் மாறிக்கொள்கிறோம் என்ற விடயத்தை முன்வைத்துப் பேசுவதால் இந்தப் பேச்சு வார்த்தைகளில் தீர்வைக் காண முடியாத ஒரு நிலை தொடர்கிறது.

ஆனால், நாம் தமிழக மீனவர்களுடன் பேசுவதற்குத் தயாராக இருக்கின்றோம். ஆனால், அவர்கள் ஒரு உறுதியான நிலையில் இருக்க வேண்டும். இழுவை மடித் தொழிலை நிறுத்துவதற்கு அவர்கள் முதலில் தயாராக வேண்டும். அதன்பின்னர் அவர்களுடன் பேசுவதற்கான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம். அவர்கள் பயன்படுத்துகின்ற தொழில்முறைதான் பிரச்சினையே தவிர எமக்கும் அவர்களுக்கும் இடையில் வேறு பிரச்சினைகள் எதுவும் இல்லை.

மீனுக்கு எல்லை இல்லை என்று சொல்வர்கள். மீன் செல்லும் திசையில்தான் மீனவர்களும் செல்கின்றார்கள். ஆனால், பலாத்காரமாக வரமுடியாது. இந்த வளங்களை எவ்வாறு பங்கிட்டுக்கொள்வது என்பது தொடர்பாகப் பேசுவதற்கு நாங்கள் தயாராகவே இருக்கின்றோம். அதனை அரசாங்க மட்டத்தில் பேசி நாங்கள் தீர்த்துக்கொள்ளலாம் முதலில் இந்த இழுவை மடித் தொழிலை நிறுத்த தாம் தயார் என அவர்கள் அறிவித்தால், வட பகுதி மீனவர்கள் தயாராகவே இருக்கின்றார்கள் அவர்களுடன் பேசுவதற்கு.

• • •

## இலங்கை வந்த ... தொடர்ச்சி ...

கொழும்பு துறைமுகத்திற்கு வந்தது. அதனால் அதற்கு அனுமதி வழங்கப்பட்டது எனவும் அவர் கூறினார்.

14 மாதங்களில் சீனாவின் ஆராய்ச்சிக் கப்பல்கள் இரண்டு தடவை இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டதை தொடர்ந்து இந்தியாவும் அமெரிக்காவும் வெளியிட்ட கடும் பாதுகாப்பு கரிசனைகள் காரணமாக ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் ஒரு வருட காலத்திற்கு ஆராய்ச்சி கப்பல்களுக்கு தடை விதித்துள்ளது.

எனினும் இந்தத் தடையை அறிவித்த வேளை அரசாங்கம் வெளி நாட்டு ஆராய்ச்சிக் கப்பல்களின் எரிபொருள் மீள்நிரப்புதலிற்கு அனுமதி வழங்கப்படுமா என்பதை தெளிவாக தெரிவிக்கவில்லை. இந்த நிலையில் தற் போதே மீள்நிரப்புவதற்கான அனுமதி வழங்கப்படும் என்பதை இலங்கை அரசாங்கம் வெளிப்படையாக தெரிவித்துள்ளது.

## புத்தாக்கம் ... தொடர்ச்சி ...

பூட்டும் நிகழ்ச்சிக்கு உங்கள் நிறுவனத்தின் கீழ் இயங்குகின்ற நிறுவனத்தில் ஆர்வமுள்ள நிறுவன அதிகாரிகள். மாணவ மாணவிகள், ஆர்வமுள்ள புத்தாக்குனர்கள். போன்ற பிரிவினர்களை இவ்விழிப் பூட்டும் நிகழ்ச்சிக்கு பங்கு பற்ற லாம்.

மேற்கூறிய மாகாண விழிப்புணர்வு திட்டத்தில் ஆர்வ முள்ளவர்களும், உங்களுக்கு தேவையான மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்வதற்கும் நிகழ்ச்சி நிரல் பிரிவிற்கு உரிய தொலைபேசி இலக்கத்துடன் 0112676650 அல்லது 0112676645 தொடர்பை ஏற்படுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

மாகாண மட்டத்தில் புதிய தயாரிப்புகளைத் தேர்ந்தெடுப்பது தொடர்பான போட்டி நிபந்தனைகளுக்கு 0704721112 (Thambalagamuwa vidatha officer) இணை தொடர்பு கொள்ளவும்,

பங்கேற்க விரும்பும் புதிய வடிவமைப்பாளர்கள், பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அவை சமர்ப்பிக்கப்படும் மாகாணத்திற்கான காலக்கெடுவிற்கு முன்னதாக அதை ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கு மாறு புத்தாக்குநர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

## இஸ்ரேலுக்கான ... தொடர்ச்சி ...

கனடா முதன்மையானது. கடந்த 2022 ஆம் ஆண்டு அது 15.6 மில்லியன் டொலர்கள் பெறுமதி யான ஆயுதங்களை ஏற்றுமதி செய் திருந்தது.

இதனிடையே, காசா வில் பட்டினிச்சாவு அச்சம் ஏற் பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவுத்திட்டம் கடந்த புதன் கிழமை(20) தெரிவித் துள்ளது.

அங்கு நிலமைகள் மிகவும் மேசமடைந்து வருகின்றன. 1.11 மில்லியன் மக்கள் பட்டினியை எதிர்நோக்கியள்ளனர். அவர்களுக்கு அடிப்டை வசதிகள் கூட கிடைக்கவில்லை. அதில் சிறுவர்களும் வயதானவர்களும் அதிகம். எனவே அங்கு மனிதாபிமான உதவிகள் கிடைப்பதற்கான வழிகள் ஏற்படுத்தப்பட வேண்டும் என அது மேலும் தெரிவித்துள்ளது.

அதேசமயம், அமெரிக்காவின் வெளிவிவகாரச் செயலாளர் அந்தோனி பிளிங்டன் மீண்டும் அரபு நாடுகளுக்கான தனது பயணத்தை இந்த வாரம் மேற்கொண்டுள்ளார். அவர் சவுதி அரேபியாவின் மன்னரை சந்தித்ததுடன், பல அரபு நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களை சந்திக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஒக்டோபர் மாதம் இஸ்ரேல் - பாலஸ்தீன மோதல்கள் ஆரம்பமாகிய பின்னர் பிளிங்டன் மத்தியகிழக்கு நாடுகளுக்கு ஆறாவது முறையாக பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

## இலங்கையின்... தொடர்ச்சி ...

பேசியிருந்தாலும் அவை மேடைப் பேச்சோடு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டவை ஆயிற்று. பாராளுமன்றத்தில், தங்களது வாக்குறுதிகளை நிறைவேற்றும் சட்டத்தையோ அல்லது அதற்கான தீர்வு கொண்டு வந்து தமிழ் மக்களுக்கான பிரச்சினைக்கு முடிவு காணவோ இவர்கள் தயாராக இல்லை.

அரசாங்கத்தின் பொய் வாக்குறுதிகளையும் சிங்களக் கட்சிகளின் மேடைப் பிரச்சாரங்களையும் மீண்டும் மீண்டும் தொடரும் அதே வாய்ப் பேச்சுக்களையும் கண்டு ஏமாறும் நிலையிலும் தமிழ் தேசிய மக்கள் இல்லை என்பதை தற்போதைய வேட்பாளர்கள் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். குறிப்பாக அநுரகுமார திசாநாயக்கா அவர்கள் இதை நன்கு விளங்கியிருத்தல் நலம்.

அவர் யாழ்ப்பாணத்திலும் கிளிநொச்சியிலும் வவுனியாவிலும் உரையாற்றுகையிலும் மக்களை சந்திக்கையிலும், குறிப்பாக, அவர் கிளிநொச்சியில் உரையாற்றுகையில், இந்தத் தேர்தல் எமது இனப்பிரச்சனைத் தீர்வுக்கான தேர்தல் இல்லை என்பதையும், மாறாக நாட்டை கட்டி எழுப்பவும் அதை மேற்கொண்டு முன்னேற்றகரமாக செயல்படுத்தவும் தான் இந்த தேர்தலை அவர் மையமாக வைத்திருப்பதை தனதுரையின் சாராம்சத்தின் ஊடாகத் தெரிவித்திருந்தார் இது எமக்கு உண்மையில் ஈழத் தமிழ்த் தேசிய இனத்தைத் தேர்தல் வெற்றிக்காகப் பகடைக் காய்களாகப் பயன்படுத்தும் சிங்களத் தலைமைகளின் இதுவரை கால, அதே பழைய ஏமாற்று யுக்தி அரசியலை தான் இன்றும் காண்பிக்கின்றது.

தேர்தற்கள மேடைகளில் அனுகுமார அவர்களுடைய வார்த்தை ஜாலங்கள் உச்சக் கட்டத்தை தொட்டு, மக்களுக்கு ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களை ஓர் அணியில் சேர்த்திருந்தாலும், ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரையில் எதிர் வரும் தேர்தலில் எத்தரப்பிற்கு வாக்களித்தாலும், அது தலை வருத்தத்திற்கு தலையணையின் உறையை மாற்றியதை போல் தான் அமையப் போகின்றது.

அனுரகுமார திசாநாயக்கா வெளிப்படையாக தமிழர்களுடைய வாக்குகளை பெற்றுக் கொள்ள வேண்டுமாக இருந்தால், ஈழத் தமிழர்களுடைய பிரச்சினைகளுக்கு நான் இன்ன இன்ன இன்ன தீர்வுகளை முன்வைக்கின்றேன் என்று அவர் வெளிப்படையாகவே அறிவிக்க வேண்டும். என்னென்ன யோசனைகளை செயல்படுத்துவேன் என்று பகிரங்கமாக ஈழத் தமிழர்களுக்கு அவர் வெளிப்படுத்தாமல் ஈழத் தமிழருடைய வாக்குகளை ஒருபோதும் அவர் பெற்றுக்கொள்ள இடம் அளிக்க கூடாது, பெற்றுக் கொள்ளவும் முடியாது.

ஏனென்றால். ஈழத் தமிழருடைய அரசியல் வரலாற்றில் அவர்கள் ஒரு உதைப்பந்தாட்ட திடலில் அகப்பட்டு கொண்ட உதைபந்து நிலைக்கே தள்ளப்பட்டு இருக்கிறார்கள், மாறி மாறி வருகின்ற ஒவ்வொரு ஆட்சியாளர்களும் உதைத்து உதைத்து மாறி மாறி கோல்களுக்கு அனுப்புவதை போன்று, ஈழத்தமிழர்களை வைத்து அவரவர் காரியங்களை சாதித்து கொண்டார்களே ஒழிய ஈழத்தமிழருடைய பிரச்சினைக்கு இதுவரை தீர்வொன்றும் வழங்கவில்லை. இவ்வாறான யதார்த்த சூழ்நிலையில் தற்போது ஈழத் தமிழர்கள் விழித்திருந்து தங்களது வாக்கை பயன்படுத்த வேண்டிய ஒரு சூழலில் இருக்கின்றோம். அந்த வாக்கை பயன்படுத்துவதற்கு முதல் அவர்கள் தங்களை உபயோகப்படுத்துகின்ற தரப்பினர் யார் என்பதை நன்கு இனம் காண வேண்டும்.'

எதிர்வரும் 23ஆம் தேதி கனடாவிலே புலம்பெயர் சமூகத்தை சந்திப்பதற்காகவும் அவர்களுடைய ஆதரவை திரட்டுவதற்காகவும் அனுரகுமார திசாநாயக்காவின் கனடா விஜயத்தை குறித்து கனடா வாழ் ஈழத் தமிழர் தெளிவாக இருப்பது நல்லது. ஈழத்தமிழருடைய இனப்பிரச்சினைக்கான தீர்வை வெளிப்படையாக அனுரகுமார திசாநாயக்கா தெரிவிக்காத சூழலில் அவருக்கான ஆதரவையோ அல்லது அந்த கூட்டத்தில் கலந்து கொள்வதையோ. கனடா வாழ் ஈழத் தமிழர்கள் புறக்கணிக்க வேண்டும் ஏனென்றால் எமது இனத்தின் அடையாளம் புலத்தில் இருக்கும் எமது சமூகத்தின் இருப்பிலே தான் தங்கியிருக்கின்றது என்பதைத் தற்காலத்தின் கள சூழல் தெளிவாக உணர்த்தி இருக்கின்றது.



களத்தில் இருப்பவர்களுடைய இருப்பை தக்க வைத்துக் கொண்டிருப்பதும் புலத்தில் உள்ளவர்களுடைய குரல்களும் அவர்களின் முன்னெடுப்புக்களும் தான் முக்கிய காரணம் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. களத்தில் இருக்கின்ற எமது ஈழத் தமிழ் தேசியவாதிகள் சிங்கள அரச பேரினவாதிகளின் ஆசை வார்த்தைகளுக்கும் பதவிகளுக்கும் சலுகைகளுக்கும் சோரம் போய் இருக்கின்றதை நாங்கள் அதிகமாக காணக்கூடியதாக இருக்கின்றது. இந்நிலையில், தேசிய மக்கள் சக்தியின் தலை வர் அனுரகுமார திசாநாயக்காவிற்கும் ஈழத் தமிழர்களை ஏமாற்றலாம் என்ற எண்ணம் இருப்பின் அதை அவர் கைவிடுவது நல்லது. குறிப்பாக தனது அரசியல் நகர்வை அவர் வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்ல வேண்டிய ஒரு காலத்தில் அவர் இருந்தாலும், அவர் ஈழத் தமிழருடைய பிரச்சினைக்கான ஒரு தீர்வை முன் வைக்காமல் ஒருபோதும் ஈழத் தமிழர்களின் வாக்கை எதிர்பார்க்க ஆசைப்படவும் கூடாது அதற்கான சந்தர்ப்பத்தை ஈழத் தமிழர்கள் அவருக்கு வழங்கவும் கூடாது என்பதில் உறுதியாக இருக்க வேண்டும். ஏனெனில் நமக்கு வரலாறுகள் தான் எமது வழிகாட்டிகள், காலங்கள் கடந்த பின்பு தான், எமக்கு அதை நிரூபித்து தருகின்றன. ஆகவே இத்தனை காலமும் ஏமாந்தது போதும் இனிமேலேனும் தமிழினம் ஜனநாயக வழி எனும் பாதையில் மீண்டும் மீண்டும் ஏமாறாமல் எம் பிறப்புடன் வந்த சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலான எமது நியாயமான அபிலாசைகளை வென்றெடுக்க முன்வர வேண்டும்.

பிரச்சினைகளுக்கான தீர்வை வலியுறுத்தி நிற்கின்ற ஈழத்தமிழர்கள் மத்தியில் சென்று அனுரகுமார திசாநாயக்கா பேசுகின்ற பொருளாதாரப் பிரச்சினைகளையோ அல்லது தேசிய ரீதியாக நாங்கள் ஒன்றித்து மக்களுக்கான ஒரு அதிகாரத்தை கைப்பற்றுவோம் என்கின்ற அவரது கோஷங்களையோ கேட்கும் பொழுது ஈழத்தமிழர்கள் மனநிலை எவ்வாறு இருக்கின்றது என்றால், தாகத்தோடு இருக்கின்ற ஒரு நபரிடம் சென்று பலகாரம் சாப்பிடுகிறீர்களா என்று கேட்பது போல் இருக்கின்றது.

எனவே அனுரகுமாரா திசாநாயக்கா அவர்கள் ஈழத்தமிழர்களுடைய இனப் பிரச்சனைக்கு என்ன தீர்வு என்பதை பகிரங்கமாக முன்மொழிவதை மாத்திரமே நாங்கள் தற்சமயம் கேட்கின்றோமே ஒழிய தீர்வை தாருங்கள் என்று நாங்கள் அவரிடம் கேட்கவில்லை. தீர்வுக்கான வழி என்ன அதற்கான ஏற்பாடுகள் என்ன என்பதை அவர் வெளிப்படையாக கூறாத பட்சத்தில் தமிழர்களுடைய வாக்குகளை கேட்க அவருக்கு எந்த தகுதியும் இல்லை ஏனெனில் தீர்வை முன் வைக்காமல் ஆட்சிக்கு வந்ததன் பிறகு தீர்க்கிறோம் என்கிறதெல்லாம் செல்லாக்காசு அரசியல், அவற்றை நாங்கள் கண்டு கண்டு ஏமாந்த சரித்திரங்கள் தான் அதிகமே ஒழிய ஒன்றையும் நாங்கள் நிதர்சன பூர்வமாக காணவில்லை, ஆகவே இனியும் நாங்கள் தொடர்ந்து ஏமாற ஏமாளிகள் இல்லை.

இம்முறை இந்த ஜனாதிபதி தேர்தலானது ஒரு வரலாற்றுத் தேர்தல் ஈழத் தமிழர்களுடைய எதிர்காலத்தை தீர்மானிக்க போகின்ற ஒரு தேர்தல் ஆகவே நாங்கள் விழிப்புடன் இருக்கின்றோம். எங்களை யாரும் ஏமாற்ற முடியாது, என்பதை அனைத்து வேட்பாளர்களுக்கும் ஜனாதிபதி வேட்பாளர்களுக்கும் ஈழத் தமிழர்களாகிய நாம் பொதுவாக தெரிவித்துக் கொள்கின்றோம். ஈழத் தமிழர்களுடைய பிரச்சினைகளுக்கு நீங்கள் முன்வைக்கின்ற தீர்வுத் திட்டங்கள் என்ன அதற்கான யோசனைகள் என்ன என்பதை வெளிப்படையாகவும் பொதுப்படையாகவும் உங்கள் தேர்தல் விஞ்ஞாபனங்களில் நீங்கள் மும்மொழியிலும் பிரசுரித்து அதனை பகிரங்கப்படுத்தி அதற்கு பிற்பாடு தமிழருடைய வாக்குகளை பெறலாம் என்று நீங்கள் சிந்திப்பது தான் சிறப்பு ஆகும்.

ஜனநாயகத்தின் விழுமியங்களைத் தான் ஈழத் தமிழர்களாகிய நாங்கள் ஜனநாயக வழியில் கேட்டு நிற்கின்றோம் வரும் ஜனாதிபதி தேர்தலிலே களம் இறங்கி இருக்கின்ற அனுர குமார திசாநாயக்கா உட்பட ஏனைய வேட்பாளர்களாக இருக்கட்டும், தற்போதைய ஜனாதிபதியான ரனில் விக்ரமசிங்கவாக இருக்கட்டும் அல்லது பொதுஜன பெரமுனையை முன்னிறுத்துபவர்களாக இருக்கட்டும் அல்லது சஜித் பிரேமதாஸ அணியாக இருக்கட்டும் எவராக இருந்தாலும் ஈழத் தமிழர்களாகிய எங்களின் சுய நிர்ணய உரிமையின் அடிப்படையிலான தீர்வுத்திட்டத்துடன் வாருங்கள் எனும் எமது நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை.

நீங்கள் யாராகவும் எவராகவும் இருங்கள் இலங்கை நாட்டைப் பொறுத்த வரையிலே சிங்கள பௌத்த பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்தவர் தான் அதிபராக வரக்கூடிய சூழலில், தமிழர்களாகிய எமது வாக்குகள் உங்களுக்கு உங்கள் சமையலை வாசனையாகவும் ருசிகரமாகவும் மாற்றுகின்ற கறிவேப்பிலையை போன்று தான் இருக்கும் என்பதை நாங்கள் நன்கு அறிந்த படியினால், இம்முறை தேர்தல் களத்திற்கு வருகின்ற நீங்கள் முன்மொழிகின்ற உங்களது தேர்தல் விஞ்ஞாபனத்தின் முன்னோடியில், ஈழத் தமிழர்கள் பிரச்சினை விடயத்தைத் தமிழர்களது வேணவாக்களின் அடிப்படையில், நாங்கள் நிரந்தரமாகத் தீர்த்து வைப்போம் என்று நீங்கள் பிரசுரிக்க கூடிய தைரியம் இருந்தால் அவ்வாறான விஞ்ஞாபனத்துடன் நீங்கள் களத்திற்கு வாருங்கள். அவ்வாறானவர்களை ஆதரிக்க ஒருபோதும் தமிழர்காகிய நாம் பின் நிற்க மாட்டோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குறிப்பாகத் தென்னிலங்கைச் சிங்கள மக்களை வார்த்தை ஜாலங்களால் வசியப்படுத்தி வரும் அனுர குமார திசாநாயக்க, லைன் வீடுகளின் அளவுப் பரிமாணங்கள் பற்றிப் பேசி முதலைக் கண்ணீர் வடிக்கும் அவரது வார்த்தை ஜாலமும், நாம் எல்லோரும் இணைந்து புதியதொரு அரசியல் கலாச்சாரத்துடனான நாட்டைக் கட்டியெழுப்புவோம் வாருங்கள் எனும் அவரது தந்திரோபாயமும், இலங்கையின் மலையகம் மற்றும் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் சுயநிர்ணய உரிமைக்காகப் போராடிவரும் ஈழத் திழினத்திடம் பலிக்கும் என்று பகற் கனவு காண்பதை நிறுத்தி விட்டு, அவர் காணும் கனவு போல் ஈழத் தமிழர்கள் எடுபட்ட காலம் மலையேறிப் பல ஆண்டுகள் கழிந்து விட்டன என்பதே அவர் முன் விசுவரூபம் எடுத்திருக்கும் யதார்த்தம் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

அத்துடன் தமிழ் தேசிய மக்கள் இயக்கம் ஆகிய நாம் வெறும் ஆட்சி மாற்றத்தை மட்டுமே

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## தொல் பொருள் ... தொடர்ச்சி ...

இந்த அடிப்படையில் சந்தேக நபர்கள் அனைவரையும் விளக்கமறியலில் வைப்பதற்கான விண்ணப்பதை முன்வைத்தனர். நாங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து சந்தேகநபர்கள் அனைவரும் இந்த நாட்டின் பிரஜைகள். நீதிமன்ற கட்டளை ஊடாக விளக்கமறியலில் வைப்பதனால் அவர்களின் சுதந்திரம் கட்டுப்படுத்தப்படுகிறது. அது சட்டத்திற்கு அமைவாகவே இருக்க வேண்டும் என தெரிவித்தோம்.

பொலிஸ் தரப்பின் விண்ணப்பம், குற்றப் பத்திரத்தை தாக்கல் செய்ய தாங்கள் ஒத்துக் கொண்ட இன்றைய தினம் (19.03) தாக்கல் செய்யாமல் சட்டா அதிபரின் அறிவுரையை இப்போது நாடியிருப்பது இந்த வழக்கின் சட்ட அடிப்படை தொடர்பிலே அவர்கள் திட்ட வட்டமான தெளிவான நிலைப்பாட்டில் இல்லை என்பதை முன்வைத்தோம். இருட்டு அறை ஒன்றில் கறுப்பு பூனையை தேடுவது போன்று தான் சந்தேக நபர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை வடிவமைக்கும் விதமாக செயற்படுகிறார்கள் என்பதையும் நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வந்தோம்.

எங்கள் தரப்பில் செய்யப்பட்ட பல்வேறு சமர்ப்பணங்கள் தொடர்பாக பரிசீலித்த நீதிமன்றம், குற்றப்பத்திரம் தாக்கல் செய்யாது சட்டமா அதிபரிடம் தற்போது ஆலோசனை பெறுவது தொடர்பில் பல கேள்விகளை பொலிசாரிடம் கேட்டிருந்தது. இறுதியில் விபரமான தீர்ப்பினை வழங்கியிருக்கின்றது. சந்தேகநபர்கள் பிணை மறுக்கப்படும் தொல்பொருள் கட்டளைச் சட்டம் 15 ஈயின் கீழ் பொலிசார் தாக்கல் செய்துள்ளார்கள் என்பதை சுட்டிக்காட்டிய மன்று, பிரஜைகள் சுதந்திரத்தை கட்டுப்படுத்த முடியாது. இது சட்டத்திற்கோ, நீதிக்குகோ ஏற்புடையது அல்ல. குற்றச்சாட்டு நிருப்பிக்கப்படும் வரை அனைவரும் நிரபராதிகளே. அதனடிப்படையில் நாங்கள் கோரியவாறு உகந்த கட்டளை ஒன்றை வழங்குமாறு முன்வைத்த கருத்தினை எடுத்து இந்த வழக்கில் இருந்து அனைத்து சந்தேக நபர்களையும் விடுதலை செய்து வழக்கினையும் தள்ளுபடி செய்து தீர்ப்பளித்தது.

குறித்த வழக்கில் சட்டத்தரணிகளான என்.சிறிகாந்தா, அன்ரன் புனிதநாயகம், க.சுகாஸ், தி.திருஅருள், அ.திலீப்குமார், நிவிதா, கிசான், தர்சா, நிதர்சன், கொன்சியஸ், சாருகேசி உள்ளிட்ட பலர் ஆஜராகி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இப்படியாக சிறுபான்மை சமூகத்தை எந்த அரசாங்கம் ஆட்சிபீடம் ஏறினாலும் நிரந்தர தீர்வு கிடைக்கப் போவதில்லை என்ற நிலைப்பாடுதான் உள்ளது .சிறுபான்மை கட்சிகள் ஒன்றினைந்து மத சுதந்திரங்களையும் உரிமைகளையும் வென்றெடுக்க முயற்சிக்க வேண்டும் அப்போது தான் எமக்குள் ஒற்றுமை ஏற்படும் வெடுக்குநாறி சம்பவத்தை கண்டித்து இலங்கை நாடாளுமன்றத்தில் எதிர்ப்பு வெளிக்காட்டப்பட்டது சிறுபான்மை பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் இதனை மேற்கொண்டிருந்தனர். விஞ்ஞானபூர்வமற்ற திரிவுபடுத்தப்பட்ட தொல்பொருள் ஆய்வின் முடிவுகளை வெளியிட்டு இவ்வாறான ஆலயங்கள் பறிக்கப்படுகின்றன தமிழர் தாயகத்தை இல்லாமல் ஆக்கி பௌத்தவாதத்தை நிலை நிறுத்த முயற்சிக்கின்றனர்.இவ்வாறான நடவடிக்கைகள் தமிழர்கள் மத்தியில் தங்களது இருப்பு தொடர்பான அச்சத்தை ஏற்படுத்துகின்றது.

இவ்வாறான பல ஆலயங்கள் வடகிழக்கில் புதிதான ஒரு விடயமல்ல முற்று முழுதாக பௌத்தமயமாக்க பல சதிகளை மேற்கொள்கின்றனர் எனவே தான் தொல்லியல் சட்டம் என்கின்ற நிலையில் மத சுதந்திரங்களை பறிக்கும் நிலை மாற வேண்டும் என்பதையே அனைவரதும் ஏகோபித்த எதிர்பார்ப்பாகும்.

• • •

## பாகிஸ்தானில்... தொடர்ச்சி ...

தாக்கப்படுவது இது முதலாவது தடவையல்ல, கடந்த வருடமும் அதன் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. சீனாவின் 23 பொறியியலாளர்கள் மீது மேற் கொள்ளப்பட்ட அந்த தாக்குதல் முறியடிக்கப்பட்டிருந் தது.

2019 ஆம் ஆண்டும் அந்த பகுதியில் இருந்த ஆடம்பரவிடுதி மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் பாகிஸ்தானின் கடற்படை அதிகாரி உட்பட ஐந்துபேர் கொல்லப்பட்டிருந்தனர்.

சீனாவிற்கும் பாகிஸ்தானுக் கும் இடையிலான வர்த்தகத்தை அரேபியன் கடலின் ஊடாக இணைக்கும் இந்த பாதை 62 பில்லியன் டொலர்கள் பெறு மதியான வர்த்தகம் நிகழும் பாதையாகும்.

## இந்தியத் துணை... தொடர்ச்சி ...

நேற்றுக் காலை முதல் யாழ்ப்பாணம் புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்துக்கு முன்பாக உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தநிலையில், உணவு தவிர்ப்புப் போராட்டம் இடம்பெற்ற இடத்துக்கு ஆதரவு தெரிவிப்பதற்காக வருகை தந்த மாதகல் மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்ட மீனவர்களுடன் இணைந்து பேரணியாக யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தின் முன்பாகச் சென்று கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர். போராட்டக்காரர்கள் திடீரெனத் தூதரகத்தை நோக்கிச் சென்று போராட்டத்தில் ஈடுபட்டதால் சிறிது நேரம் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டிருந்தது. சிறிது நேரப் போராட்டத்தின் பின்னர் மீனவர்கள் மீண்டும் உணவு தவிர்ப்புப் போராட்டம் இடம்பெற்ற இடத்துக்கு வருகை தந்து தமது எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றனர். திடீரென மீனவர்கள் யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தை நோக்கிச் சென்றதால் உடனடியாக அதிகமான பொலிஸார் வரவழைக்கப்பட்டு தூதரகத்தின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டது. இந்நிலையில், மீனவர்கள் தொடர்ந்தும் தமது உணவு தவிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்ற அதேநேரத்தில் அவர்களுக்கு ஆதரவாகப் பல்வேறு இடங்களிலும் இருந்து மீனவர்கள் வருகை தந்து ஆதரவை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கையின்... தொடர்ச்சி ...

அல்ல யாப்பு மாற்றம் ஊடாக இரு இனங்களும் அவர் அவர்கள் விரும்பும் படியான சுயநிர்ணய உரிமையை அடிப்படையாகக் கொண்ட சமூகங்களாக இனப்பிரச்சினைகள் முறையாக தீர்வு காணும் வகையில் தீர்வு திட்டங்களை முன் நிறுத்தும் அதேவேளை சக்தி மிக்க பொருளாதார கட்டமைப்பை உருவாக்க கூடிய ஆக்கப்பூர்வமான செயற்பாடுகளை முன்னெடுத்து செல்ல கூடிய தரப்பினரை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஆதரித்து நிற்க ஒருபோதும் தயக்கம் காட்டவும் மாட்டோம் என்று இம்முறை ஜனாதிபதி தேர்தலில் களமிறங்கும் அனைத்து தரப்பினருக்கும் தெளிவுபடுத்தி நிற்கின்றோம்.

• • •

## ரஸ்ய அதிபராக... தொடர்ச்சி ...

விகித வாக்குகளையும், மற்றும் லிபரல் டெமோகிரட்டிவ் கட்சியின் தலைவர் லியோனிட் சுலுற்ஸ்கி 4.31 3.20 விகித வாக்குகளையும் பெற்றுள்ளனர் என ரஸ்யாவின் தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2000 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த அவர் இரண்டு தடவைகள் வெற்றிபெற்று 2008 ஆம் ஆண்டு வரையிலும் பதவியில் இருந்ததுடன்இ அதன் பின்னர் அரச தலைவராக பதவியேற்ற டிமிற்றி மெட்வெடேவின் காலப்பகுதியில் பிரதமராக பதவி வகித்திருந்தார். அதன் பின்னர் அரச தலைவரின் ஆட்சிக் காலம் 6 வருடங்களாக மாற்றப்பட்டது. பின்னர் 2012 ஆம் ஆண்டு மீண்டும் பதவிக்கு வந்த அவர் 2018 ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலிலும் வெற்றிபெற்றிருந்தார். அதன் பின்னர் 2020 ஆம் ஆண்டு தேர்தல் சட்டம் மறுசீரமைக்கப்பட்டதால் அவர் மீண்டும் போட்டியிட்டுள்ளார்.

இதனிடையே, பூட்டீன் மீண்டும் தெரிவு செய்யப்பட்டது உக்ரேன் - ரஸ்ய போரை மேலும் தீவிரமான நிலைக்கு கொண்டு செல்லலாம் என மேற்குலக அவதானிகள் தெரிவித்துள்ளனர். ரஸ்யா மீதான உக்ரைனின் தாக்குதல்களை தடுக்க தாக்குதலற்ற பிரதேசத்தை உருவாக்கப்போவதாகவும், எதிகாலத்தில் ரஸ்யா மீதான உக்ரைனின் தாக்குதலை முற்றாக தடுப்பதற்கான புதிய திட்டம் உள்ளதாகவும் தேர்தல் வெற்றியின் பின்னர் பூட்டின் தெரிவித்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

வெளிநாடுகளின் ஆராய்ச்சிக் கப்பல்கள் இலங்கை துறைமுகங்களில் எரிபொருள் மீள் நிரப்புதலில் ஈடுபடுவதற்கு இலங்கை அனுமதி வழங்கும் என இலங்கை வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.



**வடபகுதி மீன... தொடர்ச்சி ...**

சட்டங்களை அமுல்நடத்தினால், எமது கடற் பகுதிக்கு இந்திய இழுவைப் படகுகள் வராமல் தவிர்க்க வேண்டும் என்று ஏன் நாம் இந்திய அரசிடம் கேட்க வேண்டும்? என்று அவர் வினாத்தொடுத்தார். அதேவேளை கடந்த ஆண்டு களில் உள்நாட்டு இழுவைப்படகுகளின் எண் ணிக்கையும் அரசியல்வாதிகளின் ஆதரவுடன் அதிகரிக்கப்பட்டிருப்பதுடன் மக்களிடையே முரண்பாடுகளையும் தோற்றுவித்திருக்கிறது என்று அவர் மேலும் கருத்துத் தெரிவித்தார்.

வடமாகாணத்தைச் சேர்ந்த அமைச்சரான திரு. டக்ளஸ் தேவானந்தா இந்தப் பிரச்சினையைச் சுமூகமாகத் தீர்த்துவைக்கத் தவறிவிட்டது மட்டுமன்றி, அத்துமீறி உள்நுழைகின்ற இந்திய மீனவர்கள் மேல், தாக்குதலைத் தொடுக்க கைப்பற்றப்பட்ட இந்திய இழுவைப்படகுகளை மக்களிடம் பகிர்ந்துகொடுத்து பிரச்சினையை இன்னும் மோசமாக்கியிருக்கிறார்.

அவ்வாறான இழுவைப்படகுகள் நான்கு, நான்கு மீனவ சங்கங்களுக்குப் பகிர்ந்து அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த இழுவைப் படகுகளை இயக்குவதற்குப் பெருமளவு எரிபொருளும் அதிக ஆட்பலமும் தேவைப்படுவதன் காரணத்தினால் அந்த இழுவைப்படகுகள் நான்கும் வெவ்வேறு துறைமுகங்களில் கட்டப்பட்டிருக்கின்றன.



இவ்வளவு விடயங்கள் நடந்தேறிய பின்னரும், தனது இந்திய விஜயத்துக்கு முன்னதாக இந்த விடயம் பற்றி தமிழ்நாட்டு முதல் அமைச்சரிடம் பேசும்படி, தமிழ் அரசியல்வாதிகளிடம் அவர் வேண்டுகோள் விடுத்திருக்கிறார். நாங்கள் வீதிக்கு வந்து போராடும் வரை, எங்களது நாடாளுமன்ற உறுப்பி னர்களும் இந்த விடயம் பற்றி மௌனமாகவே இருந்திருக்கிறார்கள் என்று திரு. வர்ணகுலசிங்கம் மேலும் தெரிவித்தார்.

'இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வாக இலங்கைக் கடலில் மீன்பிடிப்பதற்கான உரிமத்தை இந்திய மீனவர்களுக்கு வழங்கலாம்' என்ற ஒரு ஆலோசனை முன்வைக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறான முன்மொழிவுகளை நடைமுறைப் படுத்த வடபகுதி மீனவர்கள் ஒருபோதும் அனு மதிக்க மாட்டார்கள்.

'ஆழ்கடல் மீன்பிடி முறைக்குப் பதி லாக வேறு விதமான மீன்பிடி முறைகளைக் கையாளலாம்' என்று, அமைச்சர்கள்மட்டத்தில் இரு நாடுகளுக்கும் இடையே 2016 இல் எட்டப்பட்ட முடிவு ஆறு வருடங்கள் கடந்த நிலையிலும் இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இந்தப் பிரச்சினையைத் தீர்க்க அவர்கள் உண்மையில் விரும்பியிருந்தால், மாற்று மீன்பிடி முறைகளை விரைவாக அவர்கள் அமுலுக்குக் கொண்டுவந்திருக்க வேண்டும். அந்தச் சந்திப்பில் மேற்கொள்ளப்பட்ட ஏனைய தீர்மானங்களான, ஒவ்வொரு ஆறு மாதமும் மீனவர்கள் மட் டத்தினாலான கலந்துரையாடல்கள், இரு நாட்டுக் கடற்படைகளும் இணைந்து ரோந்து செய்தல் போன்றவை ஒருபோதுமே நடைமுறைப் படுத்தப்படவில்லை என்று ஊர்காவற்றுறை மீனவ சங்கத் தலைவரும், யாழ்ப்பாண மீனவக் கூட்டுறவுச் சங்கங்கள் ஒன்றியத்தின் மேனாள் தலைவருமான, அன்னலிங்கம் அன்னராசா சண்டே ரைம்ஸ் பத்திரிகைக்குத் தெரிவித்தார். இரு நாடுகளுக்கும் இடையே முன்னர் நடைபெற்ற கலந்துரையாடல்களில் அன்னலிங்கம் அன்னராசா பங்குபற்றியிருந்தார்.

சிறீலங்கா அதிபர் ரணில் விக்கிரமசிங்கா இந்தியாவுக்கான ஒரு உத்தியோகபூர்வப் பய ணத்தை மேற்கொள்ளவுள்ள சூழலில், வடமா காணத்திலுள்ள 50,000 மீனவக்குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்துமாறு அவர்கள் அதிபரிடம் வலியுறுத்தியுள்ளனர்.



இருநாடுகளுக்கும் இடையே அமைச்சர் மட்டக் கலந்துரையாடல்கள் நடைபெறுவதற்கு முன்னதாக, 2014ம் ஆண்டிலிருந்து, மீனவர் மட்டக் கலந்துரையாடல்களில் நாங்கள் பங்கு பற்றியிருந்தோம். அக்கலந்துரையாடலில், ஆழ்கடல் மீன்பிடியைத் தாங்கள் கைவிடுவதாக வும், அதற்குப் பதிலாக வேறு மீன்பிடி முறை களைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கென ஒரு இரண்டு வருட கால அவகாசத்தை தமக்குத் தரும்படி அவர்கள் கேட்டிருந்தனர். ஆனால் அப்படியான எதுவும் நடைபெறவில்லை. தொடர்ந்தும் அவர்கள் ஆழ்கடல் மீன்பிடியிலே தான் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்று அன்னராசா மேலும் தெரிவித்தார்.

மீன்பிடி தொடர்பாக இந்திய - இலங்கை இணைந்த செயற்குழு கடைசியாக இணைய வழியாக கடந்த வருடம் மார்ச் மாதம் 25ம் திகதி சந்தித்தது. இக்கலந்துரையாடலில், இந்திய மீனவர்களால் மேற்கொள்ளப்படும் மீன்பிடி முறைகள் தொடர்பாக இலங்கைத் தரப்பினரால் சுட்டிக்காட்டப்பட்டதுடன் வடபகுதி மீன்வர்கள் தங்கள் வாழ்வாதாரத்தை இழந்துவிடாதிருக்க இருநாடுகளும் இணைந்து செயற்றிறன்மிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் கோரப்பட்டது.

இக்கோரிக்கைக்குப் பதிலளித்த இந்திய தரப்பு ஆக்கபூர்வமான நடவடிக்கையை எடுப் பதாகவும் தொடர்ந்து தாங்கள் இவ்விடயத்தில் உதவுவதாகவும் இருபகுதியினரும் இணைந்து வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்திருந்தனர்.

இலங்கை அதிபர் ரணில் விக்கிரமசிங்க வுக்கும், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையே அடுத்த வாரம் நடைபெறவுள்ள இருதரப்புப் பேச்சுவார்த்தையில் வடபகுதி மீனவர்கள் தொடர்பான விடயம் பேசப்படும் என்று மீன்பிடி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்தார்.

இந்திய மீனவர்களால் எமது கடலில் முன்னெடுக்கப்படும் ஆழ்கடல் மீன்பிடி எமது மீனவர்களின் வாழ்வாதாரத்தை மோசமான முறையில் பாதிப்பதால், தொடர்ந்தும் நாங்கள் அதனைப் பொறுத்துக்கொள்ள மாட்டோம் என்பதை நாங்கள் தெளிவுபடுத்தியிருக்கிறோம் என்று தெரிவித்த டக்ளஸ் தேவானந்தா, பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கான இழப்பீட்டை இந்திய அரசிடமிருந்து பெறுவதற்குத் தாங்கள் முயற்சிப்பதாகவும் தெரிவித்தார்.

இந்தியாவின் பாண்டிச்சேரி, காரைக்கால், இராமேஸ்வரம், நாகபட்டினம் போன்ற பகுதி களைச் சேர்ந்த ஆகக்குறைந்தது 5000 ஆழ்கடல் இழுவைப்படகுகள், வாரம் முழுவதும் எமது கடற்பகுதிக்கு வந்து, ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபடுவதாகவும், எமது மீனவர்களின் வாழ் வாதாரம் இதனால் மிகவும் மோசமான முறையில் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் இந்திய - இலங்கை மீன்பிடிப் பிரச்சினை தொடர்பாக சிறீலங்கா நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போது, திரு. டக்ளஸ் தேவானந்தா குறிப்பிட்டிருந்தார்.

1976ம் ஆண்டில் இருநாடுகளுக்கும் இடையே ஒப்பந்தம் ஒப்பமிடப்பட்ட பின்னர், முன்னர் 36 அடி நீளத்தையும் 120 குதிரை வலு கொண்ட வெளியிணைப்பு இயந்திரங்களையும் கொண்ட இழுவைப் படகுகள் 2000 ஆம் ஆண்டுக்குப் பின்னர், 50-60 நீளமாகவும் 350-550 குதிரை வலுக்கொண்ட இயந்திரங்களைக் கொண்டதாகவும் மாற்றமடைந்தன என்று குறிப்பிட்ட திரு.டக்ளஸ் தேவானந்த இப்பிரச் சினையின் காத்திரமான தன்மையைச் சுட்டிக் காட்டினார்.

கடல் சட்டத்தின் ஐக்கிய நாடுகள் சாச னத்தின் பிரகாரம், இந்தியாவின் பிரத்தியேக பொருளாதார வலயத்தினூடாக அரேபியக் கடலுக் குள் பிரவேசிப்பதற்கு இலங்கை மீனவர்களுக்கு அனுமதி வழங்குவது தொடர்பாகவும் ரணில் விக்கிரமசிங்க பிரதமர் நரேந்திர மோடியு டன் உரையாட இருக்கிறார் என்றும் அறியக் கூடியதாகவிருக்கிறது.

அரேபியக் கடலில் ஆழ்கடல் மீன்பிடியை மேற்கொள்ளும் இலங்கை மீனவர்கள், பன் னாட்டுக் கடற்பிரதேசத்தை அடைவதற்கு மாலை தீவுக்கு அருகாக 400 கடல்மைல்கள் பயணிக்க வேண்டிய தேவை தற்போது இருக்கிறது. அப்பாவிப் பாதையூடாக இந்திய கடலை அடை வதன் மூலம் இலங்கை மீனவர்கள் நேரத்தையும் எரிபொருளையும் மீதப்படுத்த முடியும் என்று திரு. டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இந்தப்பிரச்சினை தொடர்பாக ஒரு நிரந்தரமான தீர்வை எட்டுவதை நோக்காகக் கொண்டு, எவ்வாறு ஆழ்கடல் மீன்பிடி யில் ஈடுபடும் இந்திய மீனவர்களின் இழு வைப்படகுகள், வடபகுதி மீனவர்களின் வாழ் வாதாரத்தைக் கேள்விக்குறியாக்கிருக்கிறது என்பது தொடர்பாக தமிழ் நாட்டு முதல் அமைச்சருடனும் எதிர்க்கட்சித் தலைவருடனும் பேச்சுவார்த்தையை முன்னெடுக்குமாறு தமிழ் அரசியல்வாதிகளை அவர் கேட்டுக்கொண்டார்.

இவ்விடயத்தைக் கவனத்தில் எடுக்கும் படி அந்தத் தொகுதிக்குரிய நாடாளுமன்ற உறுப்பினரிடம் பொறுப்பை ஒப்புவிக்குமாறு நாட்டின் அதிபர் தொடங்கி அமைச்சர் வரை அனைவரையும் கடந்த பல வருடங்களாக நாங்கள் கோரிவருகிறோம். ஆனால் எவருமே எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று வடமராட்சி மீனவர்கள் தெரிவித்தனர்.

**நன்றி: SUNDAY TIMES**

இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு.
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை.